Women's Action Network

WAN

# கோசம்

குரல். 02

இரண்டாம் காலாண்டு - 2011



# எமது கோசம்...

கோசம் சஞ்சிகையின் இரண்டாம் காலாண்டாக இவ்விதழ் வெளிவருகின்றது. கிழக்கு மற்றும் வடபகுதியின் சில பிரதேசங்களில் உள்ளூராட்சி தேர்தல் நிறைவடைந்துள்ள போதும் பெண்களது அரசியல் பிரதிநிதித்துவம் என்பது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. பொதுவாக ஓரிரு பெண்கள் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றியீட்டியிருப்பினும் பெண்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவம் என்பது இன்னும் வழங்கப்படாத சூழ்நிலையிலேயே உள்ளமை தெளிவாகின்றது. பெண்களுக்கான அபிவிருத்தி மற்றும் தேவைகள் மிகுதியாக இருக்கும் போது கூட அரசியல் கட்சிகள் பெண்களது அரசியல் பங்குபற்றலை ஊக்குவிக்காது இருக்கின்ற பாரபட்சநிலை இன்னமும் மாறவில்லை. யுத்தம் நிறைவடைந்து இரண்டாவது வருட வெற்றிக் கொண்டாட்டங்கள் நிகழ்த்தப்பட்ட போதும் இதுவரையில் பாதிக்கப்பட்டோர் சார்பான அபிவிருத்தியானது கேள்விக்குறியாகவே உள்ளது. யுத்தத்தினால் பெருமளவிலான பெண்கள் பாதிக்கப்பட்ட போதும் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல், விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளது எதிர்கால நலன் போன்றவற்றில் அக்கறை செலுத்தப்படாது காலம் கடத்தப்பட்டு வருவது கண்கூடு. அத்தோடு தொடர்ந்தும் இன்றுவரை வடகிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற பெண்களுக்கெதிரான வன்முறைகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள், பெண்கள் கொலைகள், தற்கொலைகள் குறைவதாக இல்லை. குறைந்தது நாளிற்கு ஓர் வன்முறைச் சம்பவமோ அல்லது அதற்கு மேற்பட்டவையோ நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இதற்கான காரணங்கள் மற்றும் அவை தொடர்பான விசாரணைகள் இடம்பெறுகின்ற போதிலும் பெரும்பாலான வழக்கு விசாரணைகள் காலதாமதமாவது குறிப்பிடத்தக்கது. ஆகவே தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டிருக்கும் இவ்வாறான பெண்களைப் பாதிக்கின்ற நிகழ்வுகளுக்கு பொறுப்புக் கூற வேண்டியதும், வன்முறைகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நீதி மற்றும் நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டியதும் அவசியமானதொன்றாகும்.

ஆகவே, நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டதால் மாத்திரம் பெண்களுக்கெதிரான வன்முறைகளோ அல்லது பிரச்சினைகளோ தீர்ந்து விடவில்லை என்பதனை நடைமுறையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. எனவே, பெண்களாகிய நாம் பெண்களுக்கான நியாயமான உரிமைகளை வென்றெடுப்பதற்காகக் குரல் கொடுக்க வேண்டிய தருணத்தில் உள்ளமை தெளிவாகின்றது.

*ஆசிரியை*



மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றத்தின் முதல் முஸ்லிம் பெண் உறுப்பினர் திருமதி சல்மா ஹம்சா 2



மீண்டும் மீண்டும் வெள்ளத்திலும் துன்பத்திலும் மிதந்து கொண்டிருக்கும் மன்னார் சாந்திபுரம் 6



தமிழ்நாடு இஸ்லாமியப் பெண்கள் ஜமாத் 8



இலங்கையின் அரசியல் தளத்தில் பெண்களின் அரசியல் பங்குபற்றுகை 16

Women's Action Network
WAN

வெளியீடு
பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு
Women Action Network



# மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றத்தின் முதல் முஸ்லிம் பெண் உறுப்பினர்

## திருமதி சல்மா ஹம்சா

"பெண்கள், ஆண்கள் மற்றும் மௌலவிமார்கள், இளவயதினர் அனைவரும் பெண்களது பிரச்சினையைப் பார்ப்பதற்கு தமது பிரதேசத்தில் பெண் ஒருவர் இருந்தால் நல்லம் என்று எனக்கு ஆதரவு தந்தார்கள். காத்தான்குடிப் பிரதேசம் சமயக் கட்டுக்கோப்பான பிரதேசம். முஸ்லிம் மக்கள் மாத்திரம் இருக்கின்றபடியால் முஸ்லிம் பெண்ணொருவர் வந்தால் சிறப்பாக இருக்கும் என்றும், பெண்கள் பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்ளலாம் என்றும் எனக்கு ஆதரவு தந்தார்கள்."

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகள் யுத்தத்தாலும், சுனாமி, வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டமை அனைவரும் அறிந்ததே. அந்தவகையில் பாதிப்புகள் மற்றும் இழப்புகள் வடக்குப் பகுதியைப் போலவே கிழக்கிலும் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தொழில் உற்பத்தி மூலதனங்கள், பெண்களது வாழ்வாதாரம், சுயதொழில் முயற்சிகள் என்பன அழிக்கப்பட்டமையோடு அவற்றை மீளமைப்பதில் பாரிய சவாலை இன்றுவரை பல குடும்பங்கள் எதிர்கொள்கின்றன. அத்தோடு தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற பொருட்களின் விலைவாசி ஏற்றம், வருவாய்ப் பற்றாக்குறை போன்றவற்றால் குடும்பங்களில் வறுமையுடனும் இல்லாமையோடும் போராடுபவர்களாகப் பெண்களே அதிகம் காணப்படுகின்றனர். இவ்வாறான சூழலில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் பெண்களது பிரதிநிதித்துவம் மற்றும் வெற்றி தொடர்பாக கவனத்தில் கொள்வது அவசியமானதாகும். அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில்

காத்தான்குடிப் பிரதேசத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற முஸ்லிம் காங்கிரஸில் உறுப்பினராக உள்ள திருமதி சல்மா ஹம்சா அவர்கள் தனது அரசியல் பிரவேசம் பற்றியும் எதிர்காலத்தில் தனது செயற்பாடுகள் தொடர்பாகவும் கூறும்போது. "கிழக்கு மாகாணத்தில் காத்தான்குடியில் முஸ்லிம் பெண்கள் எவருமே அரசியலில் இறங்காத இந்த நேரத்தில், பலம் மிகுந்த கட்சிகளுக்கிடையில் அரசாங்கத்தை எதிர்த்து அதாவது அரசாங்கத்தின் பங்காளியாக இருந்தாலும் எமது கட்சியானது தனித்துப் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு இங்கு பலமான ஒர் சுயேட்சைக் குழுவும் போட்டியிட்டிருந்தது. அக்கட்சி 2 ஆசனங்களைப் பெற்றிருந்தது. பண பலத்தோடும், ஆட் பலத்தோடும் இருக்கிற கட்சிகளுக்கு மத்தியிலே, முஸ்லிம் காங்கிரஸ் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் கஷ்டமான நிலையில் இருக்கும் சூழலிலே பலவாறான போராட்டத்திற்கு மத்தியிலே பெற்ற ஒர் வெற்றி இதுவாகும். அத்தோடு கிழக்கு மாகாணத்தில் இருந்து அதுவும் முஸ்லிம் காங்கிரஸில் உள்ள ஒரேயொரு பெண் உறுப்பினர் அதனூடாகப் போட்டி போட்டு வெற்றியீட்டியது என்பது மகிழ்ச்சிக்குரிய

விடயம்தான். இதுவரை கிழக்கு மாகாணத்தில் பிறந்த முஸ்லிம் பெண்கள் எவரும் உள்ளூராட்சியிலேயோ அல்லது மாகாண சபையிலேயோ அல்லது பாராளுமன்றத்திலேயோ பிரதிநிதித்துவம் வகிக்கவில்லை. ஆகவே இந்த வெற்றியைப் பெற்றதிலே பெண் என்ற ரீதியில் நான் பெருமையடைகின்றேன்".

தனது அரசியல் வெற்றிக்கு யார் யார் பக்க பலமாக இருந்துள்ளார்கள் எனக் குறிப்பிடும்போது "எனது கணவர் நூறுவீதம் பக்க பலமாக இருந்தார். பெண்கள் வேறு வேறு தொழில் செய்யும் போது கிடைக்கின்ற பக்க பலத்தை விட அரசியலில் ஈடுபடும் போது கணவனின் பக்க பலம் தேவை. மற்றபடி எமது பிரதேசத்தில் இருந்து பெண்கள், ஆண்கள் மற்றும் மௌலவிமார்கள், இளவயதினர் அனைவரும் பெண்களது பிரச்சினையைப் பார்ப்பதற்கு தமது பிரதேசத்தில் பெண் ஒருவர் இருந்தால் நல்லம் என்று எனக்கு ஆதரவு தந்தார்கள். காத்தான்குடிப் பிரதேசம் சமயக் கட்டுக்கோப்பான பிரதேசம். முஸ்லிம் மக்கள் மாத்திரம் இருக்கின்றபடியால் ஓர் முஸ்லிம் பெண்



வந்தால் சிறப்பாக இருக்கும் என்றும், பெண்கள் பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்ளலாம் என்றும் ஆதரவு தந்தார்கள். அத்தோடு முன்பே நான் பல சமூக நலத் திட்டங்கள் போன்றவற்றைச் செய்த காரணத்தால் நான் பெண்களுக்காக ஏதாவது செய்வேன் என அங்கீகரித்தார்கள். எந்தவித எதிர்ப்பும் வரவில்லை. அரசியல் என்ற வகையில் விமர்சிக்கப்பட்டாலும் பெண் என்ற ரீதியில் நான் விமர்சிக்கப்படவில்லை".

தனது கட்சி பற்றியும் அதிலே தனது பங்குபற்றுகை பற்றியும் குறிப்பிடுகையில் "முஸ்லிம் காங்கிரஸில் இருந்து இப்பகுதியில் 9 உள்ளூராட்சி அங்கத்தவர்களுக்காகப் 12 பேர் போட்டியிட்டோம். அதிலே நான் மட்டுமே பெண் வேட்பாளர். நான் மட்டுமே வெற்றி பெற்றேன். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 6 ஆசனங்களையும், சுயேட்சைக் குழு 2 ஆசனங்களையும் முஸ்லிம் காங்கிரஸ் 1 ஆசனத்தையும் பெற்றுக் கொண்டது".

தனது அரசியல் வெற்றி பற்றி மேலும் கூறுகையில் "வெளியில் இருந்து பார்க்கும் போது எனது வெற்றிக்கு வழமையான குடும்ப அரசியல்ப் பின்னணி காரணம் போலத் தோன்றினாலும் எனது அரசியல் பிரவேசம் அவ்வாறு அமையவில்லை. வெளிப் பார்வைக்கு பிரதியமைச்சரின் சகோதரி என்ற தோற்றம் இருந்தாலும், நான் ஆரம்ப காலகட்டத்தில் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் செய்த சமூக நல விடயங்கள் காரணமாகவே இந்த வெற்றி எனக்குக் கிடைத்தது. குடும்ப அரசியல் என்ற ரீதியில் எனக்கு ஆதரவு இல்லை. குடும்பம் எனும் போது கணவரது ஆதரவு மற்றும் தாயினது ஆசீர்வாதமும் எனக்கிருந்தது. அடுத்து இந்த சமூகத்தினரின் ஒத்துழைப்பினாலேயே என்னால் வெற்றி பெற முடிந்தது. ஆரம்பத்தில் எனக்கு நிறையப் பேர் ஆதரவு தருவதாகச் சொல்லியிருந்தார்கள். கட்டாயம் ஒரு பெண் தேவை என்று கூறியிருந்தார்கள். ஆனால் நான் எதிர்பார்த்த அளவிற்கு எனக்கு வாக்குகள் கிடைக்கவில்லை. அதற்கு கடைசி நேரத்து அரசியல் தந்திரமும் காரணமாக இருக்கலாம். ஆளுங்கட்சி என்ற மாயையோ அல்லது சுயேட்சைக் குழுக்களின் வருகையோ அல்லது பயமுறுத்தலோ அல்லது பிற கட்சிகளது திட்டங்கள் தொடர்பான கவர்ச்சித் தன்மையோ என்ன காரணமோ தெரியவில்லை. நாங்கள் உரிமை தொடர்பாக மட்டுமே பேசிக் கொண்டோம். மக்கள் எம்மை சமூகத்திற்குத் தேவையான கட்சி அதாவது சமூகக் கட்சி என்ற ரீதியில் பார்க்கவில்லை. எனினும் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் வருபவர்களது எண்ணிக்கையையும் மற்றும் அவர்களது ஆதரவையும் பார்க்கும் போது மகிழ்ச்சியாகவே இருக்கிறது."

காத்தான்குடிப் பிரதேசத்தில் உள்ள பெண்களது கல்வி, அரசியல், பொருளாதார நிலை பற்றிக் குறிப்பிடுகையில் "நான் அரைவாசிக்கு உண்மையிலேயே உள்ளூர் அரசியலில் ஈடுபட்டது ஏனெனில் பெண்களது பொருளாதாரம் மிகவும் மோசமாக உள்ளமையேயாகும். அநேகமாகப் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டும், வெள்ளம், சுனாமி போன்ற காரணத்தால் பெண்களது பொருளாதாரம் மோசமாக உள்ளது. எது வந்தாலும் இலகுவில் பாதிப்படையக் கூடியவர்கள் பொருளாதாரத்தில் அடி மட்டத்தில் இருக்கின்ற பெண்கள் தானே? வாழ்க்கைச் செலவு வேறு அதிகம். இவர்களிலே பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் கூடுதலாக இருக்கின்றன. இவர்களுக்கு பொருளாதார ரீதியில் கட்டாயம் உதவி செய்ய வேண்டும். அவர்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்கள் தொடர்பாக நான் முயற்சி செய்து கொண்டிருக்கின்றேன். தொழிற்சாலைகளில் பெண்களுக்கு வேலை வாய்ப்புப் பற்றி யோசிக்கின்றேன். ஏனெனில் இங்கு தமிழ்-



முஸ்லிம் பெண்கள் சேர்வது அரிது. அதனாலே இருபக்கப் புரிந்துணர்வு குறைவு. காத்தான்குடியை அண்மித்திருக்கின்ற இரு பகுதிகளிலும் அதாவது ஆரையம்பதி மற்றும் மஞ்சந்தொடுவாய் ஆகிய இருபகுதிகளிலும் ஏதாவது தொழிற்சாலைகள் நிறுவினால், இரண்டு இனத்திலும் பெண்கள் மாத்திரம் பயன்பெறுவதாக அவரவர்களது கலாசாரத்தைப் பழகி வேலை செய்வதாக இருந்தால் புரிந்துணர்வு மேலோங்கும். அதாவது பெண்களினூடாகத் தமிழ் முஸ்லிம் உறவைக் கட்டியெழுப்புவது பற்றிச் சிந்திக்கிறேன்.

அடுத்து கல்வி பற்றிப் பார்த்தால் பெண்கள் பலருக்கு கிராம உத்தியோகத்தர் பெயர், சமுர்த்தி உத்தியோகத்தரின் பெயர் தெரியாதிருக்கின்றது. வீட்டு விலாசத்தை சொல்லத் தெரியாது இருக்கின்றார்கள். இவ்வாறு அநேகமான பெண்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஏதாவது விழிப்புணர்வு போன்ற விடயங்களை செய்ய வேண்டி இருக்கின்றது. ஏனெனில் அரசியல் ரீதியான விழிப்புணர்வு குறைவு. சுயமாக யோசித்து முடிவெடுக்கும் தன்மை குறைவு. முற்று முழுதாக இல்லை என்று சொல்ல முடியாது. ஏனெனில் எனது வெற்றிக்குப் பெண்கள் தான் காரணம். எனினும் மேற்கூறப்பட்ட விடயங்கள் பற்றி விழிப்புணர்வு அவசியம். உரிமைகள் பற்றிக் கூறும் போது அதாவது சொத்து மற்றும் காணிப் பிரச்சினைகள் பற்றித் தெரியாதுள்ளார்கள். தமக்கு என்ன உரிமைகள் உண்டு என்பது தொடர்பாகத் தெரியாதிருக்கிறார்கள். தற்போதைய காலத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் சில நிகழ்ச்சிகளை செய்து வருகின்றார்கள். இருப்பினும் பெண்களைப் பயிற்சிப்பட்டறை போன்றவற்றில் இணைத்துச் செய்வது குறைவாகவே உள்ளது. வலையமைப்பின் ஊடாக குறிப்பிட்ட அளவு பெண்களே தெளிவடைந்துள்ளார்கள். மற்றபடி உதாரணமாகச் சொன்னால் ஓர் பெண்ணைக் கணவன் வார்த்தைப் பிரயோகங்களினால் வன்முறைக்கு உள்ளாக்கினால் அது வன்முறை என்று அவர்களுக்குத் தெரியாது. மணமுறிவு தொடர்பான விடயங்கள் பற்றியோ அல்லது அது தொடர்பாக எங்கு போய்க் கதைப்பது என்பது பற்றியோ தெரியாது சிலர் இருக்கின்றார்கள். சுனாமியின் போதான காணி உரிமை, அல்லது சட்டரீதியான தகவல்களைப் பலர் இன்றும் அறிந்திருக்கவில்லை. அவர்களுக்கு சட்ட ரீதியான விடயங்களை இலவசமாகத் தெரிந்து கொள்வதற்காக மாதம் ஒரு முறை கருத்தரங்கு நடாத்தத் திட்டமிட்டுள்ளேன். எனினும் ஆரம்பகாலம் போலன்றி தற்காலத்தில் முஸ்லிம் பெண்களது கல்வி மட்டம் அதிகரித்திருக்கின்றது. பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்வி நிறுவனங்களுக்குச் செல்கின்றார்கள். இருப்பினும் சிலர் வறுமை காரணமாகப் படிப்பினை இடையே நிறுத்துவதும் உண்டு. அதற்கு எமது அமைப்புகள் புலமைப் பரிசில் போன்றவற்றை வழங்குகின்றது. அவ்வாறான குடும்பங்களின் தாய்மார்களது வாழ்வாதாரத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது. அத்தோடு அரசியலுக்கு வந்ததில் காத்தான்குடிப்

**“தமிழ்-முஸ்லிம் என்ற பாகுபாடின்றி இரு இனங்களிலும் உள்ள பெண்களை தலைமைத்துவத்திற்கும் மற்றும் கொள்கை வகுப்பிற்கும் ஈடுபடுத்த வேண்டிய அவசியம் உண்டு. எதனை எடுத்தாலும் அதாவது கோவிலாக இருப்பினும் அல்லது பள்ளியாக இருப்பினும் எதுவாக இருப்பினும் எங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வை எம்மிடம் கேட்காமல் ஆண்கள் அவர்களே முடிவை எடுக்கின்றார்கள். மட்டக்களப்பைப் பொறுத்தவரை தமிழ்-முஸ்லிம் என்று பெண்களைப் பிரித்துப் பார்க்க வேண்டிய தேவை இல்லை.”**

பிரதேசத்தில் மாத்திரமல்ல ஏறாவூர் மற்றும் ஓட்டமாவடி போன்ற பிரதேசங்களிலும் வாழ்கின்ற முஸ்லிம் பெண்கள் தொடர்பாகவும் அவர்களது தேவைகள் தொடர்பாகவும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அங்கும் பெண்களுக்குத் தேவைகள் உள்ளன. தமிழ்-முஸ்லிம் என்றில்லாது பெண்களது தேவைகளைப் பார்க்க வேண்டிய சூழல் இன்றுள்ளது.”

காத்தான்குடிப் பிரதேசத்தில் உள்ள பெண்களது அரசியல் ஆர்வம் தொடர்பாக திருமதி சல்மா

ஹம்சா கருத்துக் கூறுகையில் "பெண்களுக்கு அரசியலில் ஆர்வம் இருக்கிறது. ஆனால் தற்போதைய அரசியலை எடுத்தால் அதற்கு பணம் மற்றும் ஆட்பலம் தேவை. அத்தோடு தற்போதைய அரசியல் கலாசாரம் வன்முறையாகவே உள்ளது. அதற்கு ஈடுகொடுத்து செயற்படுவதற்குப் பலருக்கும் பயமாக இருக்கும். உதாரணமாக என்னோடு பிரச்சாரத்திற்கு வருகின்ற பெண் பிள்ளைகள் இரண்டு நாளைக்கு ஆசையாக வருவார்கள். மூன்றாம் நாள் வந்து சொல்வார்கள் இரவு யாரோ வந்து பூச்சட்டியை உடைத்தார்கள், ஜன்னலை உடைத்தார்கள் என்றும், அதனால் வரமுடியாது என்றும் கூறுவார்கள். திரும்ப வேறொரு குழுவைத் தெரிவு செய்வேன். அவர்களுக்கு தேவையில்லாத அபத்தமான தொலைபேசி அழைப்புகள் வந்து கொண்டிருக்கும். இப்படி பிரச்சாரத்திற்கு வருகின்ற பிள்ளைகளையே பயமுறுத்தி, இழிவாகக் கருதி அவர்களை பாரபட்சம் காட்டும் நிலையுண்டு. எனக்கு கணவனின் பக்க பலம், பொருளாதாரத்தில் பிறரில் தங்காமை போன்ற காரணங்களால் பிரச்சினைகள் குறைவு. சாதாரண பெண்கள் அரசியலில் ஈடுபட முன்வரும் போது பிரச்சினைகள் உண்டாகின்றது. அவ்வாறு வருகின்ற பிரச்சினைகளை மீறி வருகின்ற பெண்கள் அவசியம். அப்படியானவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவ்வாறு பெண்கள் முன்வருவதற்கு கணவரின், தந்தையின் ஆதரவு அவசியம். ஆண்கள் குடும்பத்தில் பக்க பலமாக இருப்பார்களேயானால் வெளியே இருந்து வருகின்ற பிரச்சினைகளை எதிர்கொள்வது சுலபம்."

அரசியல் வெற்றிக்குப் பின்னரான சமூக சேவையில் தொடர்ந்தும் வழமையான வலையமைப்போடு சேர்ந்து பாதிக்கப்பட்ட பெண்களுடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற இவர், அது தொடர்பாகக் கூறுகையில் "பாதிக்கப்பட்ட பெண்கள் எனும் போது அவர்களது எதிர்பார்ப்பெல்லாம் பெரிதும் பொருளாதார ரீதியாகவே இருக்கும். நோயாக இருந்தாலும் என்னவாக இருப்பினும் அவர்களது தேவை பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் வந்து நிற்கும். தற்காலகட்டத்தில் அதிகரித்துச் செல்கின்ற பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பாகவும் செயற்படுகின்றோம். அத்தோடு குடும்பங்களில் வன்முறை இடம்பெற்றாலும் குடும்ப மானம் ஒன்றிற்காக அவ்வாறு நடக்கவில்லை என்று மறைப்பது வழமை. அவ்வாறன்றி எமக்கு நேரடியாக அறியத் தருகின்ற விடயங்களில் தலையிட்டுள்ளோம். பாரபட்சம் காட்டல் மற்றும் திருமணத்தின் போதான பெண்கள் பிரச்சினைகள் தொடர்பாகவும் கதைத்துள்ளோம். சில இடங்களில் சமூகத்தில் பெரும் அந்தஸ்து நிலையில் இருப்பவர்களிடம் பிரச்சினைகளும் பெரிதாக இருக்கும். பிரச்சினைகளை இரகசியமாகக் கையாண்டு ஊடகத்திற்குப் போகாமல் பாதிப்படைந்தவர் மேலும் பாதிப்படையாது செயற்பட்டுள்ளோம். சில இடங்களில் கணவரால் மனரீதியாகப் பாதிக்கப்பட்ட பெண்களையும் சந்தித்துள்ளோம். அவ்வாறான தருணத்தில் தேவையான உதவிகளைப் பெண்களுக்கு செய்து வருகின்றோம்."

மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில் தேடிச் செல்லும் பெண்களது பாதுகாப்புக் குறித்தும், அரசாங்கத்தோடு இணைந்து நடவடிக்கை மேற்கொள்வது பற்றிய விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்ட சல்மா ஹம்சா அவர்கள் "இதுவரை காலமும் பாதிக்கப்பட்டு வந்த பெண்களுக்காக குரல் கொடுப்பதில் மாத்திரமே இணைந்திருந்தேன். இனி வரும் காலத்தில் நான் முன்னரே குறிப்பிட்டவாறாக காத்தான்குடிப் பெண்களுக்காக மட்டுமல்லாது அனைத்துப் பெண்களது உரிமைக்காகவும் அரசிற்கு அழுத்தங் கொடுக்க முடியும். அதற்கான அதிகாரம் இன்று என்னிடம் உள்ளது. இதுவரை காலமும் அமைப்பினூடாகவே செயற்பாடுகளில் ஈடுபட முடிந்தது. அரசியல் அதிகாரமின்றி இவ்வாறான விடயங்களில் குரல் கொடுக்க முடியாதிருந்தது. ஆனால் இனி அவ்வாறன்றி பெண்கள் தொடர்பான பல விடயங்களில் செயற்பட முடியும் என நம்புகிறேன். எதிர்காலத்தில் சமூகத்தில் பெண்கள் தொடர்பாக பலவாறான விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் நினைக்கின்றேன். அதாவது தீர்மானம் எடுக்கும் மட்டத்திற்கு பெண்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டிய தேவையுண்டு. ஏனெனில் தமிழ்-முஸ்லிம் என்ற பாகுபாடின்றி இரு இனங்களிலும் உள்ள பெண்களை தலைமைத்துவத்திற்கும் மற்றும் கொள்கை வகுப்பிற்கும் ஈடுபடுத்த வேண்டிய அவசியம் உண்டு. எதனை எடுத்தாலும் அதாவது கோவிலாக இருப்பினும் அல்லது பள்ளியாக இருப்பினும் அல்லது எதுவாக இருப்பினும் எங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வை எம்மிடம் கேட்காமல் ஆண்கள் அவர்களே முடிவை எடுக்கின்றார்கள். மட்டக்களப்பைப் பொறுத்தவரை தமிழ் - முஸ்லிம் என்று பெண்களைப் பிரித்துப் பார்க்க வேண்டிய தேவை இல்லை. தனித்தனியே அவர்களுக்கு எந்த செல்வாக்கும் இல்லை. ஆகவே பெண்கள் இப்பிரதேசங்களில் தலைமை தாங்கும் நிலைக்கு வரவேண்டும். பெண்களாகிய எங்களுடைய கருத்தும் உள்வாங்கப்பட வேண்டும்" என காத்தான்குடிப் பிரதேச உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற திருமதி சல்மா ஹம்சா அவர்கள் பெண்கள் தொடர்பான பலவாறான பிரச்சினைகளையும் அவற்றைத் தீர்க்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துக் காட்டினார்.

# மீண்டும் மீண்டும் வெள்ளத்திலும் துன்பத்திலும் மிதந்து கொண்டிருக்கும்

# மன்னார் சாந்திபுரம்




மன்னார் மாவட்டத்தில் சௌத்பாரை சார்பாகக் கொண்ட ஓர் சிறிய கிராமம் சாந்திபுரமாகும். இக்கிராமம் மிகவும் பள்ளமான பகுதியில் அமைந்துள்ளது. இதனால் ஒவ்வொரு வருடமும் சிறிய மழை பெய்தால் கூட இக்கிராமம் நீரில் மிதந்து கொண்டிருக்கும். சாந்திபுர கிராமத்தில் மக்கள் குடியமர்த்தப்படுவதற்கு முன்னைய காலத்தில் இப்பகுதி கடலுடன் தொடர்புடையதாக இருந்ததாக சில தகவல்கள் கூறுகின்றன. 1987ஆம் ஆண்டிற்கு முன் இருபதிற்கு உட்பட்ட குடும்பங்களே இப்பகுதியில் வசித்து வந்ததாகவும், பின்னர் அரசாங்கத்தினால் காணியற்றவர்களுக்காக இலவச காணி இப்பகுதியிலே வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இன்று இக்கிராமமானது ஏறக்குறைய 450 குடும்பங்களைத் தன்னகத்தே கொண்ட ஓர் சிறிய அழகிய வறிய கிராமமாக வளர்ந்து வருகின்றது. அத்தோடு இக்கிராமத்தில் அரச வீடமைப்புத் திட்டத்தினால் கட்டப்பட்ட

> **“பெண்கள், சிறுவர்கள் மாரி காலத்தில் பல தொற்று நோய்களுக்கு உள்ளாகின்றனர். குறிப்பாக சிறுவர்கள் வாந்திபேதி, வயிற்றுப்போக்கு, மலேரியா போன்ற தொற்று நோய்களுக்கும் கர்ப்பிணித் தாய்மார்கள் சொல்ல முடியாத அசௌகரியங்களுக்கும் முகம் கொடுக்கின்றனர். மழைநீர் தேங்குவதனால் நுளம்பு பெருகி ஆட்கொள்ளி டெங்கு நோய் உருவாகுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகவே உள்ளது.”**

வீடுகளே அதிகமாக உள்ளன. பருவகாலத்தில் பெய்யும் மழைக்கு மட்டுமன்றி பொதுவாக இடைப்பட்ட காலத்தில் பெய்கின்ற சுமாரான

மழையிலும் இக்கிராம மக்கள் இடம்பெயர வேண்டி உள்ளனர். அதிலும் குறிப்பாகப் பெண்கள், சிறுவர்கள் பொதுக் கட்டிடம் தேடி இடம்பெயரும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

பருவகால மழையின் போது பொதுவாகவே அனைவரது காணிகளிலும் மழை வெள்ளம் தேங்கி நிற்கும். இதனால் வீடுகளில் உள்ள நிலங்கள் ஊற்று எடுப்பதுவும், சில சமயங்களில் வெள்ளம் வீட்டுக்குள் ஏறுவதுவும் வழக்கமான ஒன்றாகிவிடுகின்றது. அத்தோடு முழுமையாக நிறைவடையாத வீடமைப்புத் திட்ட வீடுகளிலும் மற்றும் மக்கள் தாமாகவே அமைத்துக் கொண்டவர்களது வீடுகளிலும் நீர்க்கசிவு, தூறல் அடிக்கும் நிலையும் காணப்படுகின்றது. இங்கு நாளாந்தம் தொழில் செய்து வாழ்கின்ற வறிய மக்கள் மட்டுமே பெருமளவில் வாழ்வதால் பல துன்பங்களுக்கு அவர்கள் உள்ளாகி வருகின்றனர். இக்கிராமத்தில் வசிக்கின்ற பெண்கள், சிறுவர்கள் மாரி காலத்தில் பல தொற்று நோய்களுக்கு உள்ளாகின்றனர். குறிப்பாக சிறுவர்கள் வாந்திபேதி, வயிற்றுப்போக்கு, மலேரியா போன்ற தொற்று நோய்களுக்கும் கர்ப்பிணித் தாய்மார்கள் சொல்ல முடியாத அசௌகரியங்களுக்கும் முகம் கொடுக்கின்றனர். மழைநீர் தேங்குவதனால் நுளம்பு பெருகி ஆட்கொள்ளி டெங்கு நோய் உருவாகுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகவே உள்ளது.

மாரிமழை காரணமாக இடம்பெயர்ந்து செல்லும் பெண்கள் பொதுக் கட்டிடங்களில் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். மழை வெள்ளம் வந்து மக்கள் இடம்பெயர்ந்த மூன்று நாட்களுக்கு சமைத்த உணவும் சில நிவாரணப் பொதிகளும் வழங்கப்படும். சுகாதார வசதிகள், மருத்துவ வசதிகள் என்பன இடப்பெயர்வின் போது ஓரளவு வழங்கப்பட்டாலும், அதுவே பின் நாட்களில் பெண்களுக்கு ஆரோக்கியக் குறைபாட்டைக் கொண்டு வருகின்றது. இம்மழைகால இடப்பெயர்வு என்பது ஒவ்வொரு வருடமும் சாந்திபுர மக்களுக்கு சாதாரணமாக நடைபெறும் ஓர் நிகழ்வாக மாறி வருகின்றது. அரச சார்பற்ற நிறுவனங்கள் பல இக்கிராமத்தில் கால் பதித்த போதும் இம்மழை நீர்த்தேக்கத்திற்கு இன்னமும் முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு வாழ்கின்ற மக்கள் தமது காணிகளில் நீரைத் தேங்கவிடாது மண் நிரப்புவதற்குத் தேவையான பணமோ அல்லது அதற்கான வசதியோ இன்றி வாழ்கின்றார்கள். அதை மீறி சிறியளவில் மண்ணை நிரப்பினாலும் நீர்த்தேக்கம் குறைவதாக இல்லை. எனவே இக்கிராமத்தில் தேங்குகின்ற மழைநீர் கடலிற்குள் வடிந்து போகக் கூடியவாறான வடிகால் அமைப்பு முறையினையோ அல்லது நிலப்பகுதியினை உயர்த்துவதற்கு ஏதுவான நடவடிக்கைகளையோ மேற்கொள்ளாத விடத்து இப்பகுதியில் வருடம் தோறும் குறிப்பாக மழைகாலங்களில் வெள்ளம் காரணமாகப் பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களையும் நோய்த் தாக்கத்தினையும் தவிர்த்துக் கொள்வதென்பது கடினமானதொன்றாகிவிடும்.

# காணாமல் போன காதல்

கண்ணே மணியே - என்
கனவுக் காதலியே
நீ பாதி நான் பாதி - உன்
மென்மனம்
ஒன்றே போதும் எனக்கென்றான்
இன்பத்திலும் துன்பத்திலும் இறுதிவரை
நான் உனக்கென்றான்
ஒரு பிள்ளை பிறந்தவுடன்
ஒதுங்கினான் சற்றே....
இரு பிள்ளை பிறந்தவுடன்
எடுத்து வா சீதனம் என்றான்.
இன்றோ...
நான்
என் தாய் வீட்டில்
இரு பிள்ளைச் சுமையுடன்

காதலின் அர்த்தமென்ன?
கரைந்து சென்ற வாழ்வென்ன?
ஏன் இந்த அரக்க மனம்
இரக்கமற்ற மனிதனுள்ளே
இல்லற வாழ்வென்பது
முன்னோர் சொன்னார்கள்
ஆயிரம் காலத்துப் பயிராம்...
ஆனால் இன்றோ - அது
ஆண் ஆதிக்கப் பிடியில்
அத்தி வாரமற்ற கட்டடமாக
ஆகிவிட்ட கொடுமையென்ன?



# தமிழ்நாடு இஸ்லாமியப் பெண்கள் ஜமாத்

தமிழ் நாட்டிலே பெண்களின் முன்னேற்றத்திற்காக, அதுவும் குறிப்பாக இஸ்லாமியப் பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் உரிமைக்காகவும் குரல் கொடுத்து வருகின்ற ஓர் அமைப்பாக ஸ்டெப்ஸ் (Steps) நிறுவனம் காணப்படுகின்றது. இது 1991 ஆம் ஆண்டு ஷெரீபா கானம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. பெண்களுக்கெதிரான அநீதிகள் மற்றும் பாரபட்சங்களை எதிர்த்தும், பெண்கள் உரிமைகள் அதிலும் முஸ்லிம் பெண்கள் உரிமைகள் தொடர்பாகவும் அதிக கவனத்தை இவ்வமைப்பு செலுத்தி வருகின்றது. வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இவ்வமைப்பானது உதவிகளைச் செய்து வருகின்றது. இனமத பேதமின்றி பெண்களுக்காக ஸ்டெப்ஸ் அமைப்பாளர்கள் செயற்பட்டு வருகின்றமைக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக 1995 ஆம் ஆண்டு திருச்சி விராலிமலை, பாத்திமா நகரில் சாமியார் எனத் தன்னைக் கூறிக் கொண்டு ஆச்சிரமம் நடாத்தி வந்த பிரேமானந்தா என்பவர் அங்கு வசித்து வந்த தாய் தந்தையற்ற சிறுமிகள் சிலரையும் வெளிநாட்டுப் பெண்களையும் பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் கைது செய்யப்பட்டார். இதன்போது பாதிக்கப்பட்ட 14 பிள்ளைகள் முக்கிய சாட்சிகளாக இருந்தனர். அவர்களுக்கு குறிப்பிட்ட வழக்கு முடியும் வரை இவ்வமைப்பே தேவையான பாதுகாப்பை வழங்கி உதவி புரிந்தது. இதனால் இவ்வமைப்பின் இணைப்பாளர் ஷெரீபா மீதும் நிறுவனத்தின் மீதும் மத ரீதியில் எதிர்ப்புக் கிளம்பியது. அதாவது இந்துமதத்திற்குக் களங்கம் விளைவிக்கும் முகமாக இவ்வமைப்பினரால் மேற்கொள்ளப்பட்ட சதியே இது எனக் குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் இறுதிவரை பிரேமானந்தா வழக்கில் ஸ்டெப்ஸ் நிறுவனம் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக இருந்ததோடு அவர்களுக்கான அனைத்து உதவிகளையும் பெண்கள் அமைப்பு எனும் ரீதியில் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர இஸ்லாமியப் பெண்கள் தமது குடும்பங்களில் அனுபவிக்கும் குடும்ப வன்முறைகள், தன்னிச்சையாக வழங்கப்படும் தலாக் (விவாகரத்து), குர் - ஆனில் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளை மறுத்து ஆணாதிக்க சிந்தனைப் போக்குடன் சமூகம் செயற்படுவதை எதிர்த்தல், முழுக்க முழுக்க ஆண்களையே கொண்டமைந்த பாரம்பரிய ஜமாத்தில் தமது பிரச்சினைகளை முறையிட்டும் நீதி கிடைக்காத காரணத்தால் பாதிப்படைந்த பெண்கள் பற்றியும் இந்நிறுவனம் கவனத்தில் கொள்கின்றது. இதன் விளைவாக ஷெரீபா கானம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதே

தமிழ்நாடு இஸ்லாமியப் பெண்கள் ஜமாத் ஆகும். இது தற்போது புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமாரி, மதுரை, திண்டுக்கல், தேனீ, நாகபட்டினம், பொரம்பலூர் எனப் பல மாவட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 15,000 இற்கும் மேற்பட்ட இஸ்லாமியப் பெண்கள் இதிலே இணைந்து செயற்படுகின்றனர். அத்தோடு இவ்வமைப்பினூடாக இஸ்லாமியப் பெண்களுக்கான சுய உதவிக் குழுக்கள், பெண்களுக்கான கிராமிய வங்கி என்பனவும் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இஸ்லாமியப் பெண்கள் ஜமாத்தினை உருவாக்க வேண்டிய தேவை பற்றி இவ்வமைப்பினர் குறிப்பிடுகையில் “இன்றைய கால கட்டத்தில், நம் இந்திய நாட்டில் நடைமுறை ரீதியில் பார்க்கும்போது இஸ்லாமியப் பெண்களுக்கு இஸ்லாமிய மதத்திலே வழங்கப்பட்டுள்ள உரிமைகள் மறுக்கப்பட்டு, உணர்வுகள் சிதைக்கப்பட்டு, இரட்டைச் சங்கிலி அடிமை முறையில் பிணைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங்களுக்கு மறுக்கப்படும் அடிப்படை மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாமல், மதத்தின் பெயரால், சுயநலவாதிகளால் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கூடத் தட்டிக் கேட்க முடியாமல் அடக்கப்படுகின்றனர். அடிப்படை உரிமைகளைக் கூடப் பெறமுடியாத நிலையில் ஒடுக்கப்படுகின்றனர். ஆண்களையே உறுப்பினர்களாகக் கொண்ட சில ஜமாத்களும், முஸ்லிம் மக்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளும், பாதிக்கப்பட்ட முஸ்லிம் பெண்களின் பிரச்சினைகளை விசாரிக்கும் போதும், பெண்களின் பங்களிப்பு மற்றும் நியாயங்கள், ஆலோசனைகளைக் கூட ஏற்றுக் கொள்ள முடியாத அளவிற்கு ஆணாதிக்க சிந்தனைவாதிகளின் ஆதிக்கம் கொண்டதாகவே உள்ளது. இவர்களின் பாரபட்சமான செயற்பாடுகளால் எமது முஸ்லிம் சகோதரிகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு ஆணாதிக்க சிந்தனை கொண்ட சில ஜமாத்களால் புறக்கணிக்கப்பட்டுப் பாதிக்கப்பட்டு மன உளைச்சலுக்கு ஆளாக்கப்பட்ட முஸ்லிம் சகோதரிகள் ஒன்று சேர்ந்துள்ளோம். எங்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலும், சமூக மேம்பாட்டிலும், எம்மைப் போன்ற பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கைத் தரத்தை நிலை நிறுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டதே தமிழ்நாடு இஸ்லாமியப் பெண்கள் ஜமாத்” எனத் தமது தமிழ்நாடு பெண்கள் ஜமாத்தினைத் தோற்றுவித்தமைக்கான காரணங்களை விளக்குகின்றனர்.

தமிழ்நாடு இஸ்லாமியப் பெண்கள் ஜமாத்தின் நோக்கம் சுயமரியாதையும், வாழ்வியல் உரிமைகளும் மறுக்கப்பட்டு வாழ்ந்து வரும் ஏராளமான இஸ்லாம் பெண்களுக்கு அவர்களது வாழ்க்கையில் நம்பிக்கைக்கு இன்னமும் இடமுண்டு என்பதை உணர்த்தல், இஸ்லாத்தில் வரையறுக்கப்பட்டுள்ள பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுவதாலும், ஆண்கள் மதம் தருவதாகச் சொல்லிக் கொள்ளும் சலுகைகளாலும் பாதிப்புக்குள்ளாகும் பெண்களுக்காகவும் குரல் கொடுத்து அவர்களுக்கான நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பது போன்றவற்றைக் கொண்டுள்ளது.

- இஸ்லாத்தில் கொடுக்கப்பட்டுள்ள பெண்கள் உரிமைகளை உணரச் செய்வது
- மிகவும் நலிந்த நிலையில் உள்ளவர்களுக்கு










தமிழ்நாடு இஸ்லாமியப் பெண்கள் ஜமாத்தினரால் முன்வைக்கப்பட்டுள்ள
அமைப்பின் கொள்கை ரீதியான வாசகங்களில் சில....

சுயதொழில் பயிற்சி மூலம் பொருளாதார மேம்பாடு அடையச் செய்வது

- எதிர்காலத்தில் இஸ்லாமியப் பெண்களுக்கு மதத்தின் பெயரால் எழுப்பப்படும் தடைகளற்ற சமூகத்தை உருவாக்குவது

(பெண்கள் ஜமாத், முரசு-01,ஆனி, 2006)

### தமிழ்நாடு இஸ்லாமியப் பெண்கள் ஜமாத்தினால் ஏற்பட்டுள்ள விளைவுகள்

- குறிப்பிட்ட காலத்திற்குள் ஜமாத்தின் செயற்பாடுகளை முஸ்லிம் பெண்களிடம் சென்றடையச் செய்தமை
- தமிழ்நாட்டில் உள்ள பல மாவட்டங்களில் உள்ள ஆண்கள் ஜமாத்தின் செயற்பாடுகளை கண்காணிக்கின்ற அமைப்புகளின் செயற்பாடுகளை வலுப்படுத்தியமை
- மாநில மற்றும் தேசிய அளவில் வரதட்சணை ஒழிப்பு, முத்தலாக் போன்றவற்றின் பாதிப்புகளை பேசச் செய்தமை
- இஸ்லாமிய இளைஞர்கள் வரதட்சணை எதிர்ப்புக் குழு மூலம் திருமணமாகாத இளைஞர்களை ஊக்கப்படுத்துகின்றமை

**ஆண்களையே உறுப்பினர்களாகக் கொண்ட சில ஜமாத்களும், முஸ்லிம் மக்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளும், பாதிக்கப்பட்ட முஸ்லிம் பெண்களின் பிரச்சினைகளை விசாரிக்கும் போதும், பெண்களின் பங்களிப்பு மற்றும் நியாயங்கள், ஆலோசனைகளைக் கூட ஏற்றுக் கொள்ள முடியாத அளவிற்கு ஆணாதிக்க சிந்தனைவாதிகளின் ஆதிக்கம் கொண்டதாகவே உள்ளது. இவர்களின் பாரபட்சமான செயற்பாடுகளால் எமது முஸ்லிம் சகோதரிகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.**





### தமிழ்நாடு இஸ்லாமியப் பெண்கள் ஜமாத்தின் எதிர்காலத் திட்டங்கள்

- இஸ்லாமியப் பெண்கள் தங்களைப் பற்றிப் பேசவும், தங்கள் நிலையை விளக்கிச் சொல்லவும், தங்களைப் பற்றி விளங்கிக் கொள்ளவும், இளைப்பாறவும், இன்னும் தம்மை மேம்படுத்திக் கொள்ளவும், மதவழிபாட்டில் ஈடுபடவும் முஸ்லிம் பெண்களுக்கான காப்பகம், பெண்களுக்கான தனிப் பள்ளிவாசல் ஒன்றைக் கட்டுதல்
- முஸ்லிம் பெண்களுக்கான கல்வியை உயர்த்துதல் மற்றும் அதற்கான வாய்ப்புகளை உருவாக்கல்
- இஸ்லாமியப் பெண்களுக்கு பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் இஸ்லாமிய சட்டப்படியான உரிமைகள், ஷரியத்தில் சொல்லப்பட்ட சட்டங்கள் பற்றி விழிப்புணர்வை ஊட்டல்
- தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பெண்கள் ஜமாத்தை உருவாக்கி பெண்களை விழிப்புணர்வூட்டல்
- பெண்கள் ஜமாத்தில் உள்ள பெண்களை மேலும் பலமுள்ளவர்களாக மாற்றல்
- முஸ்லிம் பெண்கள் நலனுக்காக மத்திய மாநில அரசுடன் பேச்சுக்களை நடாத்துதல்

(பெண்கள் ஜமாத், முரசு-01,ஆனி, 2006)

இவ்வாறு தமிழ்நாட்டிலே பெண்களுக்காக அதுவும் குறிப்பாக இஸ்லாம் பெண்களுக்காக சிறப்பாக செயற்பட்டுவரும் பெண்கள் ஜமாத் சமூகத்தில் உள்ள சிலரால் குற்றம் சாட்டப்படுகின்ற ஓர் அமைப்பாகவும் விமர்சிக்கப்படுவதனால் பல எதிர்ப்புகளையும், பலவகையான சவால்களையும் எதிர்கொள்கின்றது. அந்தவகையில் இஸ்லாமிய மதத் தலைவர்கள் சிலர் பெண்கள் ஜமாத் மற்றும் ஸ்டெப்ஸ் நிறுவனத்தின் செயற்பாடுகளை மதத்திற்கு எதிரான செயற்பாடுகளாகக் கருதி கருத்துகளை முன்வைக்கின்றனர். பெரும்பாலான பெண்களுக்குள் பதிந்துள்ள கலாசார மற்றும் மத ரீதியான பெண் உருவகமானது அவர்களைச் சிந்திக்க விடாது கட்டிப் போடுகின்றது. இதனைப் பலரும் தமக்கு சாதகமாகக் கொண்டு அவர்களை வெளிவரவிடாது தடுக்கின்ற போக்கு இன்னமும் நிலவுகின்றது. நியாயத்திற்காகப் பெண்கள் குரல் கொடுக்கும் போது அது மதத்திற்கெதிரானது என்று சிந்திப்பதனால் முன்னேற்றகரமான சிந்தனைகள் தடை செய்யப்படுகின்ற சூழலும் நிலவுகின்றது. அத்தோடு ஒரு சில பகுதிகளிலே முஸ்லிம் ஜமாத் பிரதிநிதிகளாக உள்ள பெண்களையும், ஜமாத்திற்கு ஆதரவாகச் செயற்படும் பெண்களையும் அப்பகுதி மக்கள் இழிவாகக் கருதி நடாத்துகின்றனர். சில சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு மிரட்டல்களும் விடப்படுவதுண்டு. இதனைவிட முக்கியமான விடயம் என்னவென்றால் மாநில அளவில் ஜமாத்களைக் கட்டுப்படுத்தும் அமைப்பான வக்ஃப் போர்டு இவ்வமைப்பினால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளை வாங்க மறுத்துத் திருப்பி அனுப்பி விடுகின்றனர். இவ்வாறான சவால்களை இன்னமும் தமிழ்நாடு இஸ்லாமியப் பெண்கள் ஜமாத் எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் ஸ்டெப்ஸ் பெண்கள் அமைப்பு மற்றும் தமிழ்நாட்டு முஸ்லிம் பெண்கள் ஜமாத் ஆகியவை ஒன்றிணைந்து தமிழ்நாடு முழுவதும் பலவகையான உண்ணாவிரதப் போராட்டங்களையும், கூட்டங்களையும், கலந்துரையாடல்களையும் நிகழ்த்திப் பெரும்பாலானோரது அதுவும் முற்போக்குச் சிந்தனையுடன் செயற்படுகின்ற பலரதும் ஆதரவைப் பெற்று வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றமை மகிழ்ச்சிக்குரியதாகும்.





# கொள்ளி

## சிறுகதை

"அப்பா நீங்க என்ன பாவம் செய்தனீங்கப்பா. உங்களுக்கு கொள்ளி வைக்க ஒரு ஆம்பிளைப் புள்ளய பெறாம போயிட்டீங்களே அப்பா. என்ன கொடுமையப்பா இது? என்ன அவலம் அப்பா இது? ஏனப்பா இப்படி? ஏனப்பா?"

பூபாலசிங்கத்தாரின் சடலம் வெளி வாசலுக்கு கொணரப்பட்டு வண்டியில் ஏற்றப்பட்ட போது அவரது இளைய மகள் மாலதி வீறிட்டழுதது என்னை ஒரு கணம் ஸ்தம்பிக்கச் செய்தது.

பூபாலசிங்கத்தார் இறந்த நேரம் முதல் இப்போது அவர் இறுதிப் பயணத்திற்கு புறப்படுகிறாரே இந்த இறுதி நேரம் வரை கொள்ளி வைக்க ஆம்பிளை ஒருவரைத் தேடிக்களைத்த அவலம் நிறைந்த சோகம் பலருக்குத் தெரியாது. அதனால் அவர்களுக்கு அந்த அவலம் சாதாரணமாகப்பட்டிருக்கலாம். என்னால் இதனைச் சாதாரணமாக எடுக்க முடியவில்லை.

கடந்த காலங்கள் என் நினைவுக்கு வந்தன...

நானும் பூபாலசிங்கத்தாரும் நெருங்கிய நண்பர்கள் இருவரும் ஒரே அலுவலகத்தில் பணி புரிந்தவர்கள். இருவரது வீட்டு விசேஷங்கள், கஷ்டங்கள் அனைத்திலும் ஒருவர் வீட்டில் மற்றவராக ஒன்றாக பங்கு கொண்டு வாழ்ந்தவர்கள். பூபாலசிங்கத்தாருக்கு நான்கு பெண் பிள்ளைகள். அனைவரும் திருமணம் முடித்து நன்றாக வாழ்கிறார்கள். மூத்தவள் துசித்திரா கனடாவில், இரண்டாமவள் சகி அவுஸ்திரேலியாவில், மூன்றாவது மகள் பிரதீபா மன்னாரில் பெற்றோருக்கு தெரியாமல் திருமணம் முடித்ததால் உறவு விட்டுப் போனவள். இளையவள் மாலதி கொழும்பில்.

பதின்மூன்று நாட்களாக பூபாலசிங்கம் படுத்த படுக்கையாக இருந்தார். வைத்தியர்கள் கைவிரித்து விட்டார்கள். இரத்த அழுத்தமும் நீரழிவும் கைகோர்த்து அவரை மரண வாயிலில் கொணர்ந்து நிறுத்தியிருந்தன. மக்கள் எல்லோருக்கும் பத்து நாட்களுக்கு முன்பே அறிவித்தாயிற்று.

தனது பிள்ளைகளையும் கணவனையும் காரணம் காட்டிய துசித்திரா, தன்னால் வர முடியாது என்றும் சாவு செலவிற்கு பணம் அனுப்புவதாயும் அறிவித்து விட்டாள். பிரதீபாவின் நிலை கிணற்றில் போட்ட கல்.

"ஏதும் என்றால் அறிவியுங்கள்.. அப்ப வாறன்" என்று மாலதி அறிவித்திருந்தாள்.

பூபாலத்திற்கு நினைவு தப்பிய மூன்றாவது நாள் சகி வந்து சேர்ந்திருந்தாள் தனியே.

பூபாலசிங்கத்தார் படுக்கையில் விழுந்திருந்த அந்த வீட்டிற்கு அடிக்கடி ஓடி வந்து கொண்டிருந்த எனக்கு அந்த வீட்டு நிலவரங்கள் அத்துப்படி.

நான்கும் பெண்குழந்தைகள் என்று வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி சிறுகச் சிறுகச் சேமித்து நகரப் பாடசாலைகளில் படிப்பித்து பார்த்துப் பார்த்து வளர்த்தார். பிள்ளைகளுக்கு நோய் நொடி என்றால் துடித்துப் போவார். வீட்டில் பார்க்க மனைவியிருந்தும் அவள் சொல்லியும் கேட்காமல் லீவு எடுத்து மகள்களுக்கு அருகிலேயே விழித்திருப்பார். ஆண்பிள்ளை இல்லையென்ற குறை தெரியாதபடி நான்கு பெண்களையும் மிகவும் துணிச்சலும், விவேகமும், சாதுரியமும் உள்ளவர்களாக அவர் வளர்த்த சங்கதி அனைவருக்கும் தெரியும்.
என்ன இருந்தும் என்ன?

அவரது மரண தருவாயில் ஒரு பிள்ளையாவது அவரை நினைவு தப்பும் முன் வந்து பார்க்கவில்லை என்ற குறை பூபாலசிங்கத்தாரின் மனைவி பாக்கியம்மாவிற்கு இருந்தது.

இறந்த செய்தியை அறிந்ததிலிருந்து கொள்ளி வைக்கும் பிரச்சினை தொடங்கி விட்டது. மக்கள்,

மருமக்கள், பேரப்பிள்ளைகள் என்று எல்லோரும் வந்து விடுவார்கள். எனவே விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கை பாக்கியம்மாவிற்கு இருந்தது. அதுவும் கைகூடவில்லை. மாலதியும் அவளது கணவன் அவரது தாய்க்கு கொள்ளி வைக்க வேண்டியிருப்பதால் அப்பாவுக்கு செய்ய முடியாது என விளக்கினாள். பாக்கியம்மாவின் சகோதரிக்கு மூன்று ஆண்மக்கள் இருந்தார்கள். ஒருவனின் மனைவி கர்ப்பமாம். அதனால் முடியாது என கூற, மற்றவனுக்கும் ஏதோ துடக்குச் சாட்டு வர, அடுத்தவனும் நழுவிவிட அந்த நம்பிக்கைகளிலும் மண் விழுந்தது.

“ஆம்பிளையை நம்பித்தானா இந்த உலகம்? பொம்புளைப் பிள்ளைகளைத் தானே அவர் பெற்றார். அவங்கள்ள ஒருத்தி கொள்ளி வைக்கட்டுமே” நிலைமையின் சிக்கலை சமாளிக்க அஞ்சலி வாய் திறந்தாள்.

“இது என்னடாப்பா உலகத்தில் இல்லாத வழக்கம். ஆரது இந்த யோசனையை சொன்னது?” செல்லாச்சிக் கிழவி வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு வர, அஞ்சலி சொன்னாள்.

“பின்னை என்ன ஆச்சி.. இங்க நிலைமையை பாத்தா வயிறு கொதிக்குது. வெளியூர்களில சில சமயம் பொம்பிளையளும் சவக்காலைக்கு போய் இறுதிச்சடங்கு செய்யிறவ, இப்பெல்லாம் நிலமை மாறி வருகுது”... அவளை தொடர்ந்து பேச எவரும் அனுமதிக்கவில்லை. எனவே மீண்டும் தொடங்கிய இடத்திற்கே கொள்ளிப் பிரச்சினை வந்து சேர்ந்தது.

இந்த சடங்குகளின் தார்ப்பரியங்களில் மனித உறவுகளின் விரிசல்களையும் என்னுள்ளேயே சிந்தித்துக் கொண்டேன். என்ன உலகமடா இது? பிணத்தை ஒழுங்காக அடக்கம் பண்ணவோ, எரிக்கவோ முடியாத படி அவலம். சடங்குகள் மீது எனக்கு கோபமும், ஆத்திரமும் வந்தது. ஆண்பிள்ளை ஒன்றுக்காய் சாவு வீடே அல்லோல கல்லோலப்பட நான் மனம் வெதும்பிப் போனேன்.

இந்த வேளையில் தொண்டு நோக்கில் ஒருவன் முன் வந்தான். செல்லாச்சிக் கிழவியும், முத்தம்பரும் அவனை ஆதியோடு அந்தமாய் விசாரித்து தம் சாதிக்கு ஒத்துவராதவன் என்று கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்து அவனையும் நிராகரித்து விட்டார்கள். நேரம் நான்கை நெருங்கிக் கொண்டிருந்தது. அறிவித்தலின் படி இறுதிக் கிரிகைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

எங்கிருந்தோ திடீர் என்று உறவொன்றைக் கண்டுபிடித்து முறையானவனென ஒருவனைக் கொணர்ந்து நிறுத்தினார்கள். அவனுக்கு தாய் தந்தை தற்போதில்லை. திருமணமாகாததால் பிச்சல் பிடுங்கல் இல்லை. முறையோ இல்லையோ நேரத்திற்கு பூபாலசிங்கம் வழியனுப்பப்பட வேண்டுமென்பதில் பலர் குறியாயிருந்ததால் செல்லாச்சிக்கிழவிக்கு விசாரணை செய்ய அவகாசம் இல்லாமல் போய்விட்டது. என்றாலும் நாலு பேரிடம் விசாரித்து மகன் முறை என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட திருப்தி அவளுக்கு...

இதோ திடீர்ப்பிள்ளை கொள்ளிக் குடத்தோடு முன்னே செல்ல பூபாலசிங்கம் இறுதிப்பயணம் புறப்பட்டு விட்டார்.

அப்போது தான் அந்த அலறல். மாலதியின் வெப்பிசாரம் வார்த்தைகளாய் வெடித்தது.

“அப்பா நீங்க என்ன பாவம் செய்தனீங்கப்பா. உங்களுக்கு கொள்ளி வைக்க ஒரு ஆம்பிளைப் புள்ளய பெறாம போயிட்டீங்களே அப்பா. என்ன கொடுமையப்பா இது? என்ன அவலம் அப்பா இது? ஏனப்பா இப்படி? ஏனப்பா?”

பாக்கியம்மாவிற்கு தனது இறுதிக்கணம் ஞாபகம் வந்தது. தனக்கும் இப்படி நேருமோ?
மேலே அவளால் சிந்திக்க முடியவில்லை நினைவு தப்பிச் சரியும் அவளைப் பக்கத்தில் யாரோ தாங்கிக் கொண்டார்கள்.

## விடியலை நோக்கி...

பொங்கி எழுந்திடு புயலாக
போதும் என்ற நிலை விட்டு விடு
அடிமை வலையை உடைத்து எறி

பழமைப் பெண்ணாக இருந்தது போதும்
புதுமைப் பெண்ணாக மாறிவிடு
பெண்ணின் பெருமையயை உலகிற்கு
உணர்த்திட நீயும் எழுந்துவிடு
புராணப் பெருமையை விட்டு விடு
புதுமைப் பாதையை நோக்கியபடி...

www.myselfanand.com

பால் என்பது ஆண்-பெண் இருவரையும் அவர்களது உடற்கூற்றின் அடிப்படையில் வேறுபடுத்துவதாகும். இவ்வார்த்தைப் பிரயோகத்தை நாம் ஏற்கனவே அறிந்துள்ளோம். அதாவது பிறப்பின்போதே உடல் உறுப்பின் வேறுபாடுகளை வைத்துப் பால் என்பது புரிந்து கொள்ளப்படுகின்றது. அது இயற்கையானது. நிரந்தரமானது. எங்கும் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கும். ஆனால் பால்நிலை என்பது அவ்வாறு இல்லை. மனிதனால் உருவாக்கப்பட்டது. சமூக கலாசார ரீதியாக வளர்க்கப்பட்டது. இதில் சமூக கலாசாரம் பெரும் செல்வாக்குச் செலுத்தும். பால்நிலையே ஆணுக்கு ஆண்மை, பெண்ணுக்குப் பெண்மை என்ற நடத்தை முறைகளை மற்றும் பொறுப்புகளை வழங்குகின்றது. பால்நிலை மாற்றமடையும். அதாவது காலத்திற்குக் காலம், கலாசாரத்திற்குக் கலாசாரம், குடும்பத்திற்குக் குடும்பம், சமூகத்திற்கு சமூகம், இனத்திற்கு இனம், மதத்திற்கு மதம், ஏன் நாட்டுக்கு நாடு வேறுபாடுடையது.

**"சமூகம், மதம், கலாசாரம், குடும்பம் ஆகியன பெண்பிள்ளைகளுக்கு கல்வி, அரசியல், பொருளாதாரம், விளையாட்டு, தலைமைத்துவம் போன்றவற்றில் மட்டுப்படுத்தல்களைக் கையாள்கின்றது. பால்நிலை பெண்களுக்கு வெளிப்படையான பாரபட்சத்தைக் காட்டுகின்ற அதேவேளையில் ஆண்களுக்கு பொறுப்புகள் மற்றும் கடமைகள் என்ற பெயரில் சில விடயங்களைக் கட்டாயமாகத் திணிக்கின்றது."**

# பால் - பால்நிலை பற்றி ஓர் அறிமுகம்



ஆண் - பெண்ணிடையே உடல் உறுப்புகளைத் தவிர வேறு வேறுபாடுகள் இல்லை. உடல் உறுப்பு எனும் போது கூட இனவிருத்தி உறுப்புகளே வேறுபாடுடையவை. ஆனால் பால்நிலை என்பது ஆண் - பெண்ணிடையே ஏற்றத்தாழ்வை உருவாக்குகின்ற ஓர் எண்ணக்கருவாகவே அமைகின்றது. இது ஆணை ஆண்மைத் தன்மையுடனும் பெண்ணைப் பெண்மைத் தன்மையுடனும் வேறுபடுத்துகின்றது. இதன் வெளிப்பாடாகவே ஆண்பிள்ளைகளை வீரம், துணிச்சல், தலைமைத்துவத்துடனும் பெண்பிள்ளைகளை பொறுமை, அமைதி, சாந்தம், வெட்கம் போன்ற மென்மைத் தன்மைகளுடனும் சமூகம் வளர்க்கின்றது. பால்நிலையானது ஆண்களுக்கு சாதகமானவற்றையும் அதிக வாய்ப்புகளையும் வழங்குகின்றது. அதேநேரம் பெண்களுக்கு தடைகளையும், கட்டுப்பாடுகளையும், எழுதப்படாத விதிகளையும் உண்டாக்குகின்றது. இதிலிருந்தே பெண்களுக்கான பாரபட்சம், ஓரங்காட்டல், பாகுபாடு போன்ற சமனற்ற விடயங்கள் வலுப்பெறுகின்றன. சமூகம், மதம், கலாசாரம், குடும்பம் ஆகியன பெண்பிள்ளைகளுக்கு கல்வி, அரசியல், பொருளாதாரம், விளையாட்டு, தலைமைத்துவம் போன்றவற்றில் மட்டுப்படுத்தல்களைக் கையாள்கின்றது. பால்நிலை பெண்களுக்கு வெளிப்படையான பாரபட்சத்தைக் காட்டுகின்ற அதேவேளையில் ஆண்களுக்கு பொறுப்புகள் மற்றும் கடமைகள் என்ற பெயரில் சில விடயங்களைக் கட்டாயமாகத் திணிக்கின்றது. ஆண்களுக்குத் தொழில் புருச இலட்சணம் என்றும் ஆண் பிள்ளை பயமற்றவன், (சாண் பிள்ளை என்றாலும் ஆண் பிள்ளை என்ற பழமொழி ஆண்மைத் தன்மையை வெளிப்படையாக வலியுறுத்துகின்றது) குடும்பத் தலைமைத்துவம், வீரம், பயமற்ற தன்மை, உணரச்சி வசப்படாமை, மென்மைத் தன்மையற்ற இறுகிய மனநிலை போன்றவை அவற்றில் சிலவாகும். இதற்கு மறுதலையானவற்றையே பெண்மைக்குரிய அம்சமாக சமூகம் வரையறைகளைக் கொடுக்கின்றது. வரையறைகளைக் கொடுப்பது மாத்திரமன்றி அவற்றின் மீதும் அவற்றை செயற்படுத்துவதிலும் தீவிர அக்கறை மற்றும் அதீத எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளது. இதனை உருவாக்குவதில் சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் வெகு தெளிவாகச் செயற்பட்டுக் கொண்டிருப்பது வெளிப்படையான உண்மையாகும். சில சந்தர்ப்பங்களில் ஆணிற்குரிய அம்சங்கள் என பால்நிலை அடிப்படையில் சமூகம் கொண்டுள்ள மனப்பாங்கிற்கு மாறாக

ஓர் ஆண்பிள்ளையோ அல்லது பெண்பிள்ளையோ பிரதிபலிக்கத்தவறின், அதாவது பெண்பிள்ளை அதீத துடிப்புடன் இருப்பவராகவும் மரங்களில் ஏறி விளையாடக் கூடியவராகவும், பயமின்றித் துணிச்சலுடன் செயற்படும்போதும் அக்குழந்தையை ஆண்பிள்ளை செயற்படுவது போல செயற்படுவதாகக் கொண்டு கட்டுப்படுத்தும் போக்குக் காணப்படுகின்றது. இதேபோலவே ஆண்பிள்ளை பயந்த சுபாவம் கொண்டு அமைதியாக இருப்பவராக இருந்தால் அவரது செயற்பாட்டைக் கண்டு கவலையடைவதோடு தங்களது வீட்டில் நிகழக்கூடாத ஒருவிடயம் நிகழ்ந்து விட்டதாகவோ அல்லது குறிப்பிட்ட குழந்தையின் மனநிலை மாற்றத்திற்கு யாது காரணம் என்று ஆராய்வதிலும் மற்றும் அவரது மனோபாவத்தை துடிப்பாகவும் சுறுசுறுப்பாகவும் மாற்றவும் பெரும் முயற்சி எடுக்கப்படுகின்றது. மேற்கூறப்பட்டதைப் போல ஒருவர் தனது உடல் அடிப்படையில் ஆணாகவும் ஆனால் மனதளவில் தன்னைப் பெண்ணாகவும் கொண்டு உணர்வளவில் மாத்திரம் மாற்றம் கொண்டு வாழ்ந்தும் வருகின்றனர். தற்போது பலர் துணிச்சலாகத் தமது உடலை விட்டு உணர்வு நிலை மாற்றத்தை வெளிப்படுத்தி, சமூக வரையறைகளைத் தாண்டி வாழ்கின்றனர். அதாவது உடலளவில் ஆணாகவும் மனதளவில் பெண்ணாகவும், அதேபோல உடலளவில் பெண்ணாகவும் மனதளவில் ஆணாகவும் வாழ்கின்றோர் பால் மாற்றத்தை நாடுகின்றனர். இவர்களில் ஆணினது உடலைத் தாங்கி பெண்ணினது உணர்வுகளைக் கொண்டுள்ளோர்கள் பலர் இன்று தமது மனதிற்கேற்றாற்போல பெண்ணாக பால்மாற்றம் பெற்று வாழ்கின்றனர். இவர்கள் திருநங்கைகள் எனத் தம்மை கூறிக் கொள்கின்றனர். சிலர் தமது பாலுறுப்பினை அறுவைச்சிகிச்சை மூலம் மாற்றியமைத்தும் வருகின்றனர். குறிப்பாக இந்தியாவில் திருநங்கைகள் தமது உரிமைகளுக்காகப் போராடி முன்னேறி வருகின்றமை அவதானிக்கத்தக்கது. ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரை இவ்விடயம் கவனத்தில் கொள்ளப்படாத ஒன்றாகவும், தமது பால் அடையாளத்தை மறைத்து செயற்பட்டு வந்த சிலர், பாதுகாப்புக் காரணங்களின் அடிப்படையிலும் மற்றும் ஏமாற்றுதல் என்ற முறைப்பாட்டின் அடிப்படையிலும் குற்றவியல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தற்காலத்தில் பால்-பால்நிலை-பாலியல்பு பற்றிப் பேசும்போது பால்மாற்றம் அடைந்தோர்கள் அல்லது திருநங்கைகள் பற்றிக் கருத்தில் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகின்றது.

பால்நிலை பற்றி பெண்ணிய சிந்தனையாளர்களில் ஒருவரான ஆன் ஒக்லே கூறும்போது "பாலியல் (Gender-பால்நிலை) என்பது கலாசாரம் சம்பந்தப்பட்டது. ஆணிணை-ஆண்மை என்றும், பெண்ணினைப்-பெண்மை என்றும் வித்தியாசப்படுத்துகின்ற சமூக வகைப்படுத்தலைக் குறிக்கின்றது. பாலியல் காலத்திற்குக் காலம் இடத்திற்கு இடம் மாறக் கூடியவை. பாலின் நிரந்தரத் தன்மையை ஏற்றுக் கொள்கின்ற அதேசமயம் பாலியலின் மாறுபடும் தன்மையையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். பாலியலுக்கு உடல் ரீதியான அடிப்படை கிடையாது என்றும், பாலிற்கும் பாலியலிற்கும் உள்ள தொடர்பு இயற்கையானது இல்லை" என்றும் கூறுகின்றார் (பாலியலைப் புரிந்து கொள்வோம், கம்லாபாசின், 2009). பால்நிலை என்பது பெண்களுக்கான ஒவ்வொரு செயற்பாட்டிலும் தாழ்நிலையையே கொண்டுள்ளது. அதாவது குழந்தையொன்றின் பிறப்பு முதலே பால் ரீதியாக மட்டுமன்றி பால்நிலை ரீதியாகவும் பக்குவப்படுத்தப்படுகின்றது. குழந்தையின் ஆடைகளின் நிறம், ஆபரணங்கள், விளையாட்டுப் பொருட்கள் என பாகுபாடு பார்த்துப் பார்த்து பின்னர் உணவு, பழக்கவழக்கம், கல்வி விளையாட்டு என ஒவ்வொன்றிலும் மதம், கலாசார விடயங்கள் வாயிலாக பால்நிலை ஊடுகடத்தப்படுகின்றது. இதன் வளர்ச்சி நிலையிலேயே ஆண் குழந்தையின் நடத்தை மற்றும் பெண் குழந்தையின் நடத்தை என்பன கற்பிக்கப்படுகின்றது. இவ்வாறு கற்பிக்கப்படுகின்ற ஆண்மை - பெண்மை தொடர்பான அம்சங்களூடாக அவர்களின் நடத்தை முறைகள், மனப்பாங்கு என்பன மாற்றம் காண்பதோடு அவற்றிற்கேற்ப இயைந்து செல்வது இயல்பானதே.

பால்நிலை பற்றிப் பார்க்கும் போது மொழியினூடாகப் பால்நிலை ஏற்றத் தாழ்வு எவ்வாறு வெளிவருகின்றது என்றால், நாளாந்த பயன்பாடுகளில் ஆண்கள் பயன்படுத்தும் அதிகளவான சொற்கள் அதிகாரத் தோரணை கொண்டதாகவும், ஆதிக்கம் செலுத்துகின்ற வார்த்தைப் பிரயோகங்களையும் உள்ளடக்கியிருக்கும். இது அவர்களுக்கு சாதாரணமாகவே வெளிப்படும். ஏனெனில் ஆண்கள் தமது ஆண்மைத் தன்மையை வெளிப்படுத்த மொழியை ஓர் கருவியாகக் கையாளுகின்றனர். அத்தோடு பாவனையில் உள்ள பொதுவான சொற்கள் பல ஆண்பாலை மையப்படுத்தியிருக்கும். அவற்றினைப் பொதுப்பால் எனக் கூறினாலும் அவை ஆணையே மறைமுகமாகச் சுட்டி நிற்கின்றன. செயலாளர், விமானி, அரசியல்வாதி, நிபுணர், விவசாயி, ஜனாதிபதி போன்றவற்றைக் கூறலாம். இவை காலம் காலமாக மொழியில் ஆணாதிக்கம் செலுத்துகின்ற ஆதிக்கத்தை எடுத்துக் காட்டுகின்றது.

ஆகவே பால்நிலை என்பது, ஆண்-பெண் இருபாலருக்குமிடையேயான ஏற்றத்தாழ்வை சுட்டுகின்ற ஒன்றாகும். அது இனம், மதம், கலாசாரம், பண்பாடு, மொழி ஆகியவற்றினூடாக வெளிப்பட்டு நிற்பதையும் காணலாம். இது ஆணுக்கு அதிகளவான சாதகத் தன்மையையும் பெண்ணிற்குப் பிற்போக்கான பாகுபாடான வழிவகைகளையுமே அதிகளவில் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் அரசியல் தளத்தில் பெண்களின் அரசியல் பங்குபற்றுகை

## ஓர் – பகுப்பாய்வு



> "பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக எமது குரலை ஒலிக்கச் செய்வதற்கு நாம் போராட வேண்டி இருக்கின்றது என்பது வெளிப்படை. வாய்ப்பினை எமக்குத் தட்டில் வைத்துக் கெடுக்கப்படமாட்டாது"
>
> (பொது விவகாரங்களுக்கான ஈராக்கிய அமைச்சர் நஸ்ரீன் முஸ்தபா சித்தீக், சமாதான நோக்கு, புரட்டாதி - ஐப்பசி 2003. பக்.19.)

அரசியற் பங்குபற்றுதல் என்பதற்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக அரசியல் ஆய்வாளர்களால் இவ்வெண்ணக்கரு சார்ந்து மிக விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியற் பங்குபற்றுதல் என்பது உண்மையில் இன்று நிலைபேறான அபிவிருத்தியின் குறிகாட்டியாகவும் கொள்ளப்படுகிறது.

பால்நிலையும் அரசியலும் (Gender and Politics) தொடர்பான அக்கறையும், பகுப்பாய்வும், ஆராய்ச்சியும் இன்று வளர்ந்து வருகின்றது. பெண்நிலைவாதிகளும், பெண்களின் நலன் நாடுவோரும். பெண்களின் அரசியற் பங்குபற்றலை அதிகரிப்பதற்கான அவசியப்பாட்டினையும் அதற்கான பொறிமுறைகளையும் சமூக, அரசியல் விஞ்ஞான நோக்கில் நின்று ஆராய முற்பட்டும் வருகின்றனர். அவ்வாறு பகுப்பாய்வை மேற்கொண்ட பலரும் அரசியற் தளமானது மிக நீண்ட காலமாகவே ஆண்களுக்குரியதாகவும், தந்தை ஆதிக்க மரபுகளால் ஆட்சிப்படுத்தப்படும் ஓர் துறையாகவும் காணப்படுவதனை சுட்டிக் காட்டுகின்றனர்.

உலகளாவிய சமவாயங்கள், அரசியற் சாசனங்கள் பொருத்தனைகளின் பிரகாரம் அரசியற் பங்குபற்றலானது ஆண்கள், பெண்கள் இருசாராருக்கும் சமத்துவமான நிலையில் காணப்படுகின்றதை உறுதிப்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும் நடைமுறையில் இவ்விடயம் சார்ந்து கணிசமான இடைவெளிகளும் குழப்பங்களும் முரண்பாடுகளும் நிலவவே செய்கின்றன. தேர்தலில் போட்டியிடுதல், வாக்களித்தல், பராளுமன்றத்தில் செல்வாக்குச் செலுத்துதல், தீர்மானம் நிறைவேற்றுதல். சட்டங்களை இயற்றுதல் முதலான விடயங்களில் இன்றுவரையிலும் பெண்களுக்குரிய ஸ்தானம் பூரணமாக வழங்கப்படவில்லை என்பதனையே மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. பெண்களின் பௌதீக உடற்கூறு மற்றும் வேறு காரணங்களைச் சுட்டிக்காட்டி அவர்களின் அரசியற் பங்கேற்பினை கதவடைப்பதற்கு அல்லது மட்டுப்படுத்துவதற்கு இந்த 21ஆம் நூற்றாண்டிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதனை நாம் அவதானிக்கின்றோம். எனவே, இலங்கையில் பெண்களின் அரசியற் பங்குபற்றுகை, அது சார்ந்து நிலவும் சவால்கள் அதற்கு நிகரான மாற்று வாய்ப்புகள் எதிர்காலத் திட்டங்களைப் பற்றியே இக்கட்டுரை பேச முற்படுகின்றது.

### பெண்களும் அரசியல் ஈடுபாடும்.

இலங்கையின் அனுபவம் ஈடுபாடு பற்றிய பழமையான குறிப்புகளானவை வேதகாலம், சங்ககாலம் தழுவிய இலக்கியங்களிலும் காணக் கிடைக்கின்றன. கிராமிய சபா, மக்கள் சபா, நகரசபா என்பவற்றில் பெண்களின் அங்கத்துவம் பற்றிய குறிப்புகள் தரப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களிலும் அமைச்சர்களாகவும் சமாதானம் பேசுவோராகவும் அரசனுக்கு மதியுரை பகர்வோராகவும் பெண்கள் அரசியல் தளத்தில் இயங்கி உள்ளமையினை அவதானிக்கின்றோம்.

உலகலாவிய அரசியலை எடுத்து நோக்குவோமாயின், மேலைத்தேய மற்றும் தென் மற்றும் தென்கிழக்காசிய அரசியற் தளங்களைப் பார்த்தால், அரசியல் சார்பான வரலாறுகளில் தந்தையாதிக்கம், பாரபட்சம், அசமத்துவம் முதலான குணாம்சங்கள்

பிரதிபலிப்பதனை ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். அதாவது, தந்தையாதிக்கம் பெண்கள் அரசியலில் ஈடுபடுவதனை மட்டுப்படுத்தி வந்துள்ளது, அன்றேல் இல்லாதொழித்து வந்துள்ளது.

இலங்கை வரலாற்றை எடுத்து நோக்கினால் குவேனி என்கின்ற குலமரபுப் பெண், அனுலாதேவி என்னும் சிங்கள அரசி முதலியோரின் அரசியல் ஈடுபாட்டினை அல்லது பங்குபற்றலை வரலாற்றுக் குறிப்புகளாகக் காண்கின்றோம் எனினும் காலனித்துவ காலகட்டத்தில் அதாவது போத்துக்கேயர் காலம் முதல் பிரிட்டிஷ் காலம் வரை வெளியூர் அல்லது உள்ளூர் பெண்களோ அரசியலில் பாரியளவில் செல்வாக்கினை செலுத்தவில்லை என்பதாக அறியப்படுகின்றது.

டாக்டர் திருமதி மேரி இரட்ணம் அவர்கள் அமைப்பு என்கின்ற ரீதியில் "இலங்கைப் பெண்கள் சங்கம்" என்கின்ற அமைப்பினை 1905 இல் ஸ்தாபித்தார். கிராமப்புற பெண்களின் கல்வி மேம்பாடு, சுகாதார விழிப்புணர்வு, தொழில்வாய்ப்பு என்பவற்றோடு சிறப்பாக பெண்களின் அரசியல் பங்குபற்றல் சார்பான விருத்தியிலும் அவ்வமைப்பு கவனம் செலுத்தியது. மூவினப் பெண்களும் இச்சங்கத்தில் அங்கத்துவம் வகித்தனர். இவர்கள் இலங்கைப் பிரஜைகளுக்கு வாக்குரிமை வழங்குதல் தொடர்பான தீர்மானமும் அதனையொட்டிய விவாதங்களும் முன்னெடுக்கப்பட்ட நிலையில் "பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டும்" என்ற வலுவான கோரிக்கையை முன்வைத்தனர். பின்னர் இக்கோரிக்கையின் பேரில் ஏற்பட்ட ஆர்வமும் ஈடுபாடுமே "பெண்களின் வாக்குரிமைச் சங்கம்" என்கின்ற அமைப்புத் தோன்ற வழிகோலியது.

இந்த நிலையில் வர்க்க, மத, பண்பாட்டு, இனத்துவத் தளங்களில் முற்போக்கு முகங்காட்டிய சில கலைஞர்களின் ஆணாதிக்கப்போக்கும் அதனைப் பிரதிபலிக்கும்படியான அபிப்பிராயங்களும் வெளியில் வந்தமையினையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும். பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதானது "பன்றிகளுக்கு முன்பாக முத்துக்களைத் தூவுவதற்கு சமமாகும்" என்ற வகையில் கருத்துகள் தெரிவிக்கப்பட்டபோது படித்த முற்போக்குப் பெண்கள் கொதித்தெழுந்தனர். மிக நிதானமாக அதேவேளை நியாயபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டியதன் அவசியப்பாட்டினை வலியுறுத்தினர். இறுதியில் தமது கோரிக்கையில் வெற்றி பெறவும் செய்தனர்.

இலங்கையின் பாராளுமன்ற அரசியல் வரலாற்றை எடுத்து நோக்கும் போது சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்திலும் அதன் பின்னரும் பல பெண்கள் சட்டசபை உறுப்பினர்களாகவும் அமைச்சர்களாகவும் மாகாணசபை, உள்ளூராட்சி, எதிர்கட்சித் தலைவிகளாகவும், பிரதமர்களாகவும், ஜனாதிபதியாகவும் இருந்து தமது பங்குபற்றலை உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனால் பெண்களின் அரசியல் பிரவேசமும் ஏனைய செயற்பாடுகளும் அவர்களது குடும்ப ஆண் வழிசார்ந்து அமைந்திருக்கின்றமை பற்றிய விமர்சனங்களையும் நாம் மறுப்பதற்கில்லை.

## அரசியற் பங்கேற்பில் பெண்களின் ஈடுபாட்டைத் தடுக்கும் பாரம்பரியக் காரணிகள்.

அரசியல் என்றவுடன் அது பொதுத்தளம் சார்ந்தது, ஆண்களுக்கு மட்டுமே உரித்தானது என்னும் கருத்தியல் பாரம்பரியமாகவே நிலவி வருவதனைக் காணலாம். கௌரவமான குடும்பப் பெண்களுக்கு அரசியல் என்றுமே உகந்ததில்லை என்கின்ற வாசகங்களையும் அடிக்கடி படிக்கிறோம்: கேட்கிறோம். இத்தகைய கருத்துகளின் பின்புலத்தில் தந்தையாதிக்க நலன்கள் இழையோடுவதனை (Patriarchal Benefits) நாம் தெளிவாக இனங்காண முடியும்.

அரசியல் தளமானது சலனப் போக்குடையது. நெளிவு சுழிவுகள் நிறைந்தது. ஆபத்தானது எனும் படியான கருத்துப் படிமங்களின் கீழ் பெண்கள் போஷிக்கப்பட வேண்டியவர்களே அன்றி ஆபத்தை எதிர்நோக்கிடவல்லவர்கள் அல்லர். அவர்களால் உணர்ச்சிபூர்வமாகவே தீர்மானங்களை எடுக்க முடியும் என்றும், பெண்களினால் இராஜதந்திர இரகசியங்களைப் பேணிப் பாதுகாக்க இயலாது என்பதாகவும், சான்றாதாரமற்ற பொதுப்புலன் (Comment Sense) சார்ந்த, தவறான முற்சாய்வுகள் சமூக மட்டத்தில் காணப்படுதோடு அவை குடும்பம், பாடசாலை, மத ஸ்தாபனங்கள், அரசியல், ஊடகங்கள் வாயிலாகவும் மீளுற்பத்தி செய்து நிலை நிறுத்தப்படுகின்றன. வேறு வகையில் அரசியல் என்பது நாட்டின் அரசாங்கத்தோடு தொடர்புடைய ஒன்றாகவும் ஆட்சி நிர்வாகத்தின் விருப்பு, வெறுப்புகளை ஈடேற்றும் ஓர் நிர்வாக இயந்திரமாகவும், இன்னுமொரு வகையில் ஆணாதிக்க அதிகார செயற்பாடாகவும் நோக்கப்படுகின்றது.

நாட்டின் சனத்தொகையில் அரைப்பங்கிற்கு மேலான விகிதாசாரத்தைப் பெண்கள் கொண்டிருக்கும் நிலையில் பெண்களின் அபிலாசைகள், அபிப்பிராயங்கள், கருத்துகள், பங்கேற்பு என்பன அரசியல் துறையில் உள்ளீர்த்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்பதனை ஆணாதிக்க அரசியல் மரபுகள் மறந்து செயற்படுகின்றன. எனினும் இத்தகைய பாரபட்சமும், கதவடைப்பும் இன்று கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது. பெண் அமைப்புகளும் பெண்களின் அரசியற் பங்கேற்புத் தொடர்பில் காத்திரமான பணிகளையும் முன்னெடுத்து வருகின்றன.

வரலாற்று நிலையில் இலங்கை அரசியலில் பெண்களின் பங்கேற்பு 1928 ஆம் ஆண்டில் The Hindu Organ பத்திரிகை ஆசிரியர் குறிப்பிடும்போது "பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதானது,

எமது பண்பாடு, சாதி, சமயக் கோட்பாடுகளுக்கு முரணானது" என எழுதினார். இக்கூற்று சமூகத் தலைமைகள், பெண்களின் அரசியற் பங்கேற்புத் தொடர்பில் கொண்டிருந்த பிற்போக்குத்தனமான கருத்தியலை எடுத்துக் காட்டுகிறது. Hindu Organ (இந்து சாதனம்) ஆனது "ஒரு பெண், தனது மேற்கத்தேய ஆணைக்குழு சிபார்சு செய்வது போல, ஆணும், பெண்ணும் சமத்துவமானவர்கள் அல்லர்" எனவும் கருத்து வெளியிட்டது.

இதற்கு எதிர்வினையாக "நாங்கள் ஆண்களுக்குச் சமமான உரிமை கொண்டவர்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கு மட்டுமல்ல, நகரசபை மற்றும் சட்டவாக்க சபைகளிலும் நிற்கத் தகுதியானவர்கள்" என்பதைத் "தமிழ்மகள்" செய்தித்தாளின் ஆசிரியை மங்களம்மாள் எழுதினார்.

சுதேசிய மட்டத்தில் வீறார்ந்து எழுந்த ஆணாதிக்க எதிர்ப்பலைகளையும் பொருள் கொள்ளாமல், டொனமூர் ஆணைக்குழுவானது 1931 இல் 21 வயதுக்கு மேற்பட்ட இருபாலாருக்குமே வாக்குரிமை உண்டென்பதைச் சிபார்சு செய்தது. 1931 இல் சட்ட சபைத் தேர்தல் இடம் பெற்றது. அத்தேர்தலில் போட்டியிடுவதற்கு எந்தவொரு பெண்ணும் முன்வரவில்லை. எனினும் அதன் பின்பாக இடம்பெற்ற இடைத் தேர்தலில் இரு பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமையானது இலங்கையின் அரசியல் வரலாற்றில் பொறிக்கப்பட்ட சம்பவம் ஆகும்.

முதலாவது சட்டசபையின் பெண் பிரதிநிதியாக எட்லின் மொலமூரே பெருமை தேடிக் கொண்டார். 1932 இல் நேசம் சரவணமுத்து என்பவர் கொழும்பு தெற்கில் போட்டியிட்டு 13114 வாக்குகளைப் பெற்று குறிப்பிடத்தக்க வெற்றியைச் சுவீகரித்துக் கொண்டார். அதன் பின்னர் 1980 ஆம் ஆண்டு வரை தமிழ்ப் பெண்கள் எவரும் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. 1980 ஆம் ஆண்டைப் பொறுத்தளவில் பொத்துவில் தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக ரங்கநாயகி பத்மநாதன் தனது சகோதரனின் இறப்பு நிமிர்த்தம் நியமிக்கப்பட்டார். 1989 இல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த புலேந்திரன் இறப்பின் காரணமாக அவரது மனைவி இராஜமனோகரி புலேந்திரன் வவுனியா மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டார். 1994 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு இவர் தெரிவு செய்யப்பட்டதுடன் கல்வி இராஜாங்க அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார், இவரே அமைச்சர் பதவி வகித்த முதலாவது தமிழ்ப்பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது. 2004 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தங்கேஸ்வரியும் யாழ் மாவட்டத்திலிருந்து பத்மினி சிதம்பரநாதனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 2010 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் யாழ் மாவாட்டத்திலிருந்து விஜயகலா மகேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டார்.

1947 ஆம் ஆண்டு கொழும்பு மத்திய தொகுதியில் போட்டியிட்ட ஆயிஷா ரவூப் என்பவர் சுயேட்சையாக போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். ஆயினும் தேர்தலில் போட்டியிட்ட முதலாவது முஸ்லீம் பெண் இவரே ஆவார். இவர் 1949 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டு கொழும்பு மாநகர சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தவகையில் ஓர் அரசியல் பதவியைப் பெற்ற முதலாவது முஸ்லீம் பெண் இவரே ஆகும். 1999 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பிரதேச சபைக்காக அஞ்ஞான் உம்மா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 2000 ஆம் ஆண்டு தேர்தலில் ஜே.வி.பி.யின் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்தில் இடம்பிடித்த முதலாவது முஸ்லீம் பெண் ஆவார். எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் திடீர் மரணத்தைத் தொடர்ந்து அவரது மனைவி பேரியல் அஷ்ரப் பாராளுமன்ற அரசியலில் உள்நுழைந்தார். தேசிய ஐக்கியக் கூட்டணித் தலைவராகவும் செயற்பட்டமையால் அரசியற் கட்சியின் தலைமைப் பதவியை வகித்தவர் என்ற வகையில் பெருமைக்குரியவராவார். அத்துடன் அமைச்சராக பதவி வகித்த முதலாவது முஸ்லீம் பெண்ணும் இவரே ஆகும். ஆயினும் 2010 ஆம் ஆண்டு தேசிய ஐக்கிய கூட்டணிக் கட்சியைக் கலைத்ததுடன் அவ்வாண்டு நடைபெற்ற தேர்தலிலும் தோல்வியைத் தழுவிக் கொண்டார். இன்றைய பாராளுமன்றத்தில் முஸ்லீம் பெண் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விட்டமையானது மிகவும் வருந்தத்தக்க ஓர் விடயமாகும்.

சுதந்திரம் பெற்ற கையோடு சிங்களப் பெண்களின் அரசியற் பங்கேற்பில் ஒரு வேகமான அலை எழக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அது அவ்வாறு நிகழவில்லை. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட அமைச்சரவையில் விமலா கன்னங்கரா முதலான ஒரு சில பெண்களின் பங்கேற்பினையே எம்மால் அவதானிக்க முடிகின்றது. பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் மரணத்தைத் தொடர்ந்து ஸ்ரீமாவோ பாண்டாரநாயக்கா அரசியலுக்குள் நுழைந்தார். தென்னாசியாவில் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையையும் பெற்றார். அதேபோன்று சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா கணவனின் இறப்பின் பின் 1994 இல் அரசியலுக்குள் நுழைந்து ஜனாதிபதியாகவும் பதவி வகித்தார். பிரதமரும் ஜனாதிபதியும் பெண்களாக இருந்தபோதிலும் அரசியலிலும் கொள்ளை உருவாக்கத்திலும் பெண்களை வலுவூட்டுவதற்கும், பெண்கள் உரிமையை நிலைநாட்டுவதற்கும் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

இதன்படி 1947-1977 இற்கு இடைப்பட்ட காலத்துப் பொதுத் தேர்தலில் தமது பங்கேற்பை நல்கிய பெண்களின் எண்ணிக்கையும் கூட மிக வரையறுக்கப்பட்ட நிலையிலேயே பதிவாகியுள்ளது.

இவ்வகையில் சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியுமே கணிசமான அளவில் பெண்களைத் தேர்தலில் நிறுத்த முற்பட்டன. எவ்வாறாயினும் பெண் வேட்பாளர்களின் விகிதாசாரம் ஆண் வேட்பாளர்களுடன் ஒப்பிடும்போது, 1947 இல் 1.1 வீதமாகவும் 1970 இல் 12 வீதமாகவும் 1994 இல் 1.6 வீதமாகவும் அதிகரித்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. 1989 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 52 பெண் வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டனர்.

பாராளுமன்ற அரசியல் நாம் ஏற்கனவே குறிப்பிட்டவாறு ஆணாதிக்கத்தின் இரும்புக் கோட்டையாகவே திகழ்ந்தது. எனினும் அதனை முறியடிக்கும் சவாலையுடைய பெண்களும் கருத்தியல்வாதிகளும் இன்று தோன்றி வருகின்றமையும் அவதானிக்கத்தக்கது. 1947 இல் 2.1 வீதப் பெண்களே பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்டுள்ளனர். 1977 இல் அவ் விகிதாசாரம் ஆனது 4.8 வீதமாகவும் 1989 - 1994 காலப்பகுதியில் அது 5.3 வீதமாகவும் காணப்பட்டு 2000ஆம் ஆண்டில் 4 வீதமாகவும் வீழ்ச்சியுற்றது. 2010 தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவம் 5.7 வீதமாகவும் சற்று அதிகரித்துள்ளது. இவ்வாறே 1957 ஆம் ஆண்டிலிருந்தே பெண்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டார்கள். 1994, 2000, 2001, 2004 ஆகிய ஆண்டுகளில் சராசரி மூன்று பெண்கள் அமைச்சர்களாக இருந்தார்கள். 2010 ஆம் ஆண்டு புதிய அமைச்சரவையில் இருவர் மட்டுமே பெண் அமைச்சர்களாகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது வெறும் புள்ளி விபரங்களுக்கு அப்பால் பாரம்பரியக் கருத்து நிலைகள், பெண்கல்வி, குடும்ப ஆதரவு சமூக மனோபாவ மாற்றம், பாதிப்பு, இரட்டைச் சுமையைத் தணித்தல், பாலியல்பு பற்றிய கண்ணோட்டத்தைச் சீர்திருத்தல் முதலான அம்சங்களையும் நாம் இவ்விடயம் சார்ந்து இணைத்துச் சிந்திக்க வேண்டும்.

இலங்கையின் சட்டசபையில் பெண்களின் பிரதிநிதித்துவம் (1947-2010) எவ்வாறு நிலவியது என்பதை பின்வரும் அட்டவணை காட்டும்.

| தேர்தல் இடம்பெற்ற ஆண்டு | பிரதிநிதிகளின் முழுத்தொகை | பெண் பிரதிநிதிகளின் தொகை | பெண்களின் விகிதாசாரம் |
|---|---|---|---|
| 1947 | 95 | 2 | 2.1 |
| 1952 | 95 | 2 | 2.1 |
| 1956 | 95 | 3 | 3.2 |
| 1960(பங்குனி) | 151 | 3 | 1.9 |
| 1960(ஆடி) | 151 | 2 | 1.3 |
| 1965 | 151 | 4 | 2.6 |
| 1970 | 151 | 6 | 3.9 |
| 1977 | 168 | 8 | 4.8 |
| 1989 | 225 | 12 | 5.3 |
| 1994 | 225 | 12 | 5.3 |
| 2000 | 225 | 09 | 4.0 |
| 2001 | 225 | 10 | 4.4 |
| 2004 | 225 | 13 | 5.7 |
| 2010 | 225 | 13 | 5.7 |

(Sources: www.Parliment.lk hand book of Parliament lady member's www.guide 2 women leaders.com/srilanka.)

அவ்வாறே இலங்கையின் அமைச்சரவை சார்ந்த பெண்களின் பிரதிநிதித்துவத்தை (1947-1994) பின்வரும் அட்டவணை காட்டி நிற்கும்.

| தேர்தல் வருடம் | மொத்த நாடாளுமன்ற அங்கத்தவர் எண்ணிக்கை | மொத்த அங்கத்தவர் தொகை | பெண்களின் விகிதாசாரம் |
|---|---|---|---|
| 1947 | 13 | 0 | 0.0 |
| 1952 | 13 | 0 | 0.0 |
| 1956 | 12 | 1 | 8.3 |
| 1959 | 14 | 4 | 7.1 |
| 1960 (பங்குனி) | 07 | 0 | 0.0 |
| 1960 (ஆடி) | 09 | 1 | 10.1 |
| 1965 | 16 | 0 | 0.0 |
| 1970 | 19 | 1 | 5.0 |
| 1977 | 22 | 1 | 4.5 |
| 1978 | 25 | 1 | 4.0 |
| 1989 | 21 | 1 | 4.5 |
| 1993 | 23 | 1 | 4.1 |
| 1994 | 20 | 3 | 13.1 |
| 1994 | 20 | 3 | 13.1 |

Sources: www.Parliment.lk hand book of Parliament lady members www.guide 2 woment leaders.com/srilanka.

## பரிந்துரைகள்

எனவே இதுவரை நாம் நோக்கியவற்றில் இருந்து பெண்களின் அரசியல் பங்கேற்பு சார்ந்து பல்வேறு தடைகள், சவால்கள், காணப்பட்டாலும் மாறிவரும் காலதேச, வர்த்தமானங்களுக்கேற்ப புதிய வாய்ப்புகளும் இல்லாமல் இல்லை. தென், தென்கிழக்காசிய நாடுகளில் எவ்வாறாயினும் அப்பிரதிபலிப்பு அத்துணை திருப்திகரமானதாகவோ அல்லது பாரிய முன்னேற்ற காரணமானதாகவோ இல்லை. எனவே நாம் பின்வரும் பரிந்துரைகளை முன்வைக்கலாம்.

1. மகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள், பாராளுமன்றம் ஆகியவற்றில் குறைந்த பட்சம் 30 வீத ஒதுக்கீடும், தேசியப்பட்டியல் நியமனத்தில் 50 வீதப் பெண்களும் காணப்படுதல் அவசியம்.

2. அதிகளவு பெண்கள் அமைச்சர்களாகவும், பிரதியமைச்சர்களாகவும், அமைச்சுகளின் செயலாளர்களாகவும், நிறுவனங்களின் தலைவர்களாகவும் இருப்பதுடன் சட்டத்துறையிலும் அதிக பெண்கள் பணியாற்றல்.
3. 2003 இல் நிறுவப்பட்ட தேர்தல் சீர்திருத்தத்திற்கான நாடாளுமன்றத் தேர்வுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பெண்கள் தொடர்பில் விடயங்களை நடைமுறைப்படுத்தல்
4. அரசியற் கட்சிகள் பெண் வேட்பாளர்களுக்கு அதிகளவான ஆதரவும் வளங்களும் வழங்குதல். அத்துடன் கட்சித்தலைமைத்துவம் கொள்கை வகுப்புக் குழுக்கள் என்பவற்றில் பெண்கள் பங்குபற்றுவதற்கு வாய்ப்பளித்தல்.

5. அரசியல் கட்சி சட்டங்கள் மற்றும் தேர்தலுடன் தொடர்புடைய சட்டங்கள் பெண்களுடைய பங்களிப்பினை குறைவுபடச் செய்யாமல் அரசாங்கம் பாதுகாக்க வேண்டும்.
6. அரசியற் கட்சிகள் தங்களுடைய வேட்பாளர் பட்டியலில் பெண்களுக்கு சமமான இடம் வழங்குவதை அரசாங்கம் உறுதி செய்தல் அவசியம்
7. தேர்தலில் பெண்களின் பங்களிப்பினை உயர்த்தும் வகையில் தேர்தல் முறைகள் சட்டவாக்கம் என்பவற்றுக்கு அரசாங்கம், ஏனைய அமைப்புகளுக்கு சர்வதேச செயற்பாட்டாளர்கள் ஆலோசனை வழங்குதல்.
8. பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆர்வம் கொண்டுள்ள பெண்களை இனம் கண்டு ஊக்கமளித்து உதவிகளைச் சிவில் சமூக அமைப்புகள் செய்வது சாலப் பொருத்தமாகும்.
9. பெண்களை மையப்படுத்திய வகையில் வாக்காளர், சிவில் கல்வி நிலையங்களை உருவாக்குதல்.
10. பெண் தலைமைத்துவம் தொடர்பில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளைத் தவிர்த்து ஆக்கத்திறன் கொண்ட நிகழ்ச்சிகளை ஊடகங்கள் வழங்குதல் வேண்டும். குறிப்பாகப் பெண்கள் அரசியற் பங்குபற்றுகையை ஊக்குவிக்கும் பல்வேறு வகையான செயற்றிட்டங்களை மக்களிடையே பகிர்ந்து கொள்ளுதல் அவசியமாகும்.

இலங்கையில் பெண்கள் அரசியல்வாதிகளாக பங்குபற்றுவது பொதுவாக கணவன் வழி, ஆண் உறவினர்களின் துணையுடன் இடம்பெறுவது அவர்களின் தலைமைத்துவத்தை, ஆளுமையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது எனலாம். ஏனெனில் பெண் அரசியல்வாதிகளும் பெண்களின் அரசியல் பங்குபற்றுகையை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுத்து, அழுத்தி உரைத்து, நடைமுறைப்படுத்துவது மிகவும் குறைவு என்பதை அனுபவரீதியாக உணர்ந்து கொள்ள முடியும். ஆயினும் இன்று கண்டி பெண்கள் அபிவித்தி மன்றம், சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், விழுதுகள் மேம்பாட்டு மையம் முதலான பல அமைப்புகளின் பணி விதந்துரைக்கற்பாலது. இன்னும் அவை விஸ்தரிக்கப்பட்டு பெண்களின் அரசியற் பங்கேற்பினை உள்ளார்ந்த இயக்காற்றல் மிக்க சமூகப் பொறிமுறையும் (Social Mechanism) சமூகச் செயல்வாதமும் (Social activism) முன்னெடுக்கப்படும்போதே அரசியல் களத்திலான பால்நிலை சார்ந்த அசமத்துவம் இல்லாதொழிக்கப்படுவது சாத்தியமாகும்.

## உசாத்துணைகள்


1. Kamalawathie, I.M. Women in parliamentary politics in Sri lanka, in women at the cross Road: A Sri Lanka perspective adited by srim kiribamune & vidyamali samarasinghe, kandy. ICES, 1990
2. Kiribamuna sirima (Ed) Women in Politics and srilanka: A Comparative Perspective, kandy, ICES, 1999
3. Thiruchandran, selvy The Politics of Gender and Women's Agency Post colonial srilanka, Colombo, Women and Education and Recearch centre 1997
4. Heywood Andrew, Political theory, 2005, Palgrave MacMillan, New York
5. சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், மட்டக்களப்பு பெண், தொகுதி:- 06:இல03, 04.2001,
6. பெண்களின் கொள்கை விளக்க அறிக்கை, 2004 பெண்களின் அரசியல் வட்ட வெளியீடு, கொழும்பு
7. ஜெயவர்த்தனா, கிஷாலினி பின்ரோ கொடிக்கார சூலனி, இலங்கையில் பெண்களும், ஆட்சிமுறையும் இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் கொழும்பு 2003
8. ஜெயவர்த்தனா குமாரி டாக்டர் மேரிரட்ணம், சமூகவிஞ்ஞானிகள் சங்கம். 1993 கொழும்பு.





தாயின் கருவறையில் உதித்தவனே
உனது
பிறப்பிடம் பெண் அல்லவோ?
உயரிய சிந்தனைகள் கொண்ட
அவளை - நீ
தூசென எண்ணி அடக்குவதும் ஏனோ?

பெண்ணின் வயிற்றில் பிறந்த - நீ
பெண்ணையே உனக்குத்
துணையாகக் கொள்ளும் - நீ
பெண்ணின் மனதைப் புரியாது
போகப் பொருளாய் நினைப்பதுவேனோ?

அடுப்படிக்குள் அவளை முடக்கியுமே
ஆறாத் துயரும் கொடுப்பதோடு
தடுத்தே அவளின் ஆளுமையை
நசுக்கித் தகாதது செய்தல் நீதியாமோ?

**Women Action Network**
8/3, 202 , W.A. Silva Mawathe.
Colombo 06, Sri Lanka.
e-mail: tmwn2010@gmail.com

விலை ரூபா 25.00